# நாவாய் சாத்திரம்



பதிப்பாசிரியர் :டாக்டர். எஸ். சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (ஆங்.), பி.எட்., டிப்.வ.மொ., பி.எச்.டி.,

பொதுப் பதிப்பாசிரியர் : நடன காசிநாதன், எம.ஏ.,

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடிகள்
வரிசை எண்-78

# நாவாய் சாத்திரம்

பதிப்பாசிரியர்
டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்
எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ. (ஆங்கி.) பி.எட்., டிப்.வ.மொ., பி.எச்.டி.,
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை - 5

பொதுப்பாசிரியர்
நடன. காசிநாதன், எம். ஏ.,
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை - 113

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை - 5
1995

விலை ரூ. 51/-

Printed by

**Royapettah Stationery and Printing and Allied Products Producers Indl. - Co.op Society Ltd.**

26, Koya Arunagiri First Street Royapettah

Madras - 600 014. ☎ : 84 56 70

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS SERIES - 78

# NAVAI SATTIRAM

Editors :
**DR. S. SOUNDARAPANDIAN,**
M A.(Tamil)., M A.(Eng)., B.Ed., Dip in Skt , Ph D.,
Curator
Government Oriental Manuscripts Library, Madras -5

General Editor:
**NATANA. KASINATHAN, M.A.,**
Director
State Archaeological Department
Madras - 113

©

**Government Oriental Manuscripts Library, Madras - 5**
**1995**

**Price Rs. 51/-**

# பொருளடக்கம்

*1.* பொதுப்பதிப்பாசிரியர் முன்னுரை

*2.* பதிப்பாசிரியர் முன்னுரை

*3.* நூல்



# பொதுப்பதிப்பாசிரியர் முன்னுரை

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள அச்சில் வெளிவராத சுவடிகளில் ஒன்று **"நாவாய் சாத்திரம்"** என்ற ஓலைச்சுவடி ஆகும். இதற்கு முன்பு **"கப்பல் சாத்திரம்"** என்ற நூலையும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் வெளியிட்டுள்ளது.

நாவாய் சாத்திரம் என்னும் இந்நூல் கப்பல் கட்டும் முறைகள், கப்பலைச் செலுத்தும் முறைகள் முதலியன பற்றி கூறுகிறது.

தொல்பொருள் ஆய்வுத்துறை மூலமாக பூம்புகார் ஆழ்கடல் ஆய்வு நடைப்பெற்று வரும் இத்தருணத்தில் "நாவாய் சாத்திரம்" வெளிவருவது பொருத்தமானதாகும். நாவாய் சாத்திரம் நூலின் மூலமாகப் பழந்தமிழர்களின் கடல் அனுபவமும் அறிவும் நமக்குத் தெரிய வருகின்றது.

அச்சில் வாரா நூற்களை வெளிக் கொணர்வதில் தமிழக அரசு பேருதவி செய்து வருகிறது.

இதற்காக பண்பாட்டுத்துறை முன்னாள் செயலாளர் சா.பா. **இளங்கோவன்**, இ.ஆ.ப. அவர்களுக்கும் இந்நாள் செயலர் இரா. **கிறித்துதாசு காந்தி** இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓலைச்சுவடியிலிருந்து நாவாய் சாத்திரம் என்னும் நூலை செம்மையாகப் பதிப்பித்தவர் டாக்டர் **எஸ்.சௌந்தரபாண்டியன்**, எம்.ஏ., எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ.,பி.எச்.டி., காப்பாட்சியர் ஆவார்.

பழந்தமிழாகளின் கடலின் அறிவையும், கப்பல் கட்டும் தொழில் அறிவையும் விளக்குவதற்கு பெரும் சான்றாக இந்நூல் இருக்கும் என்று நம்புகிறேன்.

**நடன.காசிநாதன்.**

# நாவாய் சாத்திரம்

## பதிப்புரை

### சுவடி

**நாவாய் சாத்திரம்** எனும் இத்தொழில் நுட்ப நூல், அ.கீ.சு நூலக ஒலைச்சுவடியிலிருந்து (டி.2015) பதிப்பிக்கப் பெறுவதாகும்.

ஒலைச் சுவடியில் மொத்தம் 64 ஓலைகள் உள.

அ.கீ.சு நூலகம் 1950இல் வெளியிட்ட கப்பல் சாத்திரம் என்ற நூலினும் இது வேறானது.

நாவாய் சாத்திரம் எனும் இந்நூல் இதுவரை அச்சில் வெளிவராதது.

அ.கீ.சு. நூலகத்தைத் தவிர, இத்தகைய நூல் வேறெங்கும் இருப்பதாகத்தெரியவில்லை.

### நூலின் ஆசிரியர்

**நூலாசிரியர் பெயர் சுவடியில் குறிப்படப்படவில்லை.** ஆனால், ஓரிடத்தில் "ஆதி எழுதின நாவாய் சாத்திரம்" என்று ஓலையில் உளது. ஆதி என்பவர் வேறொரு ஓலைச்சுவடியினின்றும் பெயர்த்து இவ்வோலைச் சுவடியில் எழுதியிருக்க வேண்டும்.

### நூலின் காலம்

ஓலைச்சுவடியின் ஓரிடத்தில், நூலின் காலத்தை உணர்த்தத்தக்க ஒரு குறிப்பு உளது. "துன்மதி ஆ. தை 18 மா சுக்கிர வாரம்" என்பதே அது. இதற்கு நிகரான ஆங்கில ஆண்டு 1741 ஜனவரி 16 ஆம் நாள், வெள்ளிக் கிழமை ஆகிறது. (Swamikkannu pillai, Indian ephemeris, 1922 Vol.6, p.284)

அஃதாவது, கி.பி. 1741 இல் இவ்வோலைச் சுவடி பெயர்த்தெழுதப்பட்டிருக்க வேண்டும்.

எனவே, நூல் முதன் முதலில் தோன்றிய காலம் கி.பி. 1741க்கு முன்பு என்பது தேற்றம்.

### நூலின் இன்றியமையாமை

நாவாய் சாத்திரம் எனும் இந்நூல் பதிப்பிக்கப்படுவது மிகமிகத் தேவையானதாகும்.

இந்நூல் தமிழரின் கப்பல் கட்டும் திறனை உலகுக்குப் பறைசாற்றச் சான்றாக நிற்கிறது.

ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் யாங்ஙனம் மரக்கலங்களைக் கட்டினார்கள், அவற்றைச் செலுத்தி மகிழ்ந்தார்கள் என்ற மாபெரும் உண்மையை உலகுக்கு உணர்த்தவல்லது இந்நூல்.

கப்பலின் படம் ஒன்று இந்நூலில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஓலைச்சுவடியில் வரையப்பட்டிருந்த அப்படம் தமிழர் வாழ்வைத் துலங்கக் காட்டுவதாகும். அக்கப்பலில் நங்கூரம் உள்ளமையும் குறிக்கத்தக்கது.

நாவாய் சாத்திரம் எனும் இந்நூலில், கப்பலைக் குறிக்கப் பல்வேறு சொற்கள் கையாளப்பட்டுள்ளன. அவை,

1. நாவாய்
2. வங்கம்
3. கலம்
4. ஏரா
5. தோணி
6. யாத்திரை மரம்
7. படகு
8. ஓடம்
9. கப்பல்

கப்பல் கட்டுவதற்கான மரத்தைத் தேர்ந்தெடுக்கும் போது, அதன் வெட்டுவாயைப் பார்த்துத் தேர்ந்தெடுக்கும் முறையை வியத்தகு முறையில் விவரிக்கிறது இந்நூல்.

மரத்தின் வெட்டுவாய் மஞ்சளாக இருந்தால், அந்த மரத்தில் உடும்பு வாழும் என்று கூறுகிறது இந்நூல். இது மேலும் ஆயத்தக்கதே.

**சமுக்கு** என்றொரு கருவியை இந்நூல் நவிலுகிறது. (பாடல் 56)

பழந்தமிழர்கள் சமுக்கு என்ற இக்கருவியைக் கப்பல் செலுத்தும் போது பயன்படுத்தி உள்ளார்கள் என அறிய வருகிறோம். இது காந்த ஊசிப் பெட்டியாக இருக்க வேண்டும். இதைக் கொண்டு பழந்தமிழர்கள் திசையறிந்து கப்பலைச் செலுத்தியிருக்க வேண்டும். இது போன்ற தமிழர் தொழில்நுட்பங்கள் (Technologies of Tamils) பலவும் மறைந்துபோயின!

கப்பலின் எல்லாவகை உறுப்புகளுக்கும் தமிழ்ப்பெயர்கள் இருந்தன என்பதற்கு இந்நூலே சான்றாக நிற்கிறது.

ஏரா, பருமல், தொகுதி, வங்கு, பாய்மரம், பாய், முதலியன கப்பலின் சில உறுப்புகள்; இவை யாவும் இந்நூலில் பேசப்படுகின்றன.

ஏரா என்ற சொல் கப்பலின் அடிமரத்தைக் (keel) குறிக்கும். கப்பல் முழுவதற்குமே ஏரா என்னும் ஒரு பெயர் உளது.

**பருமல்** என்பது, கப்பலின் குறுக்குமரமாகும் (Yard-arm).

**தொகுதி** என்பது மர ஆணி (பா.118)

கப்பல் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் மரத்தில் சுழிகள் இருக்கக் கூடாது என்ற இலக்கணத்தை வகுக்கிறது இந்நூல். சுழிகளைப் போலவே, சில உருவங்களும் மரத்தில் (இழைத்த மரத்தைப் பார்த்தால் தெரியும்) காணப்படும். இவை **கண்ணடை** என்று பேசப்படுகின்றன. விலங்கின் குளம்பு போலவும், பூப்போலவும் இன்னும் சிலவாறாகவும் கண்ணடைகள் மரங்களில் இருக்கும் என்றும், அவற்றையெல்லாம் பார்த்தே கப்பல் கட்டுவதற்கு மரத்தை எடுக்க வேண்டும் என்று விதிவகுக்கிறது இந்நூல்.

இப்படிபட்ட தொழில்நுட்பங்களையெல்லாம் கையாண்டு மரக்கலங்களைச் சமைத்தறிந்த பழந்தமிழ்க்குடி விசுவகர்மர் குடியாகும். இந்நூலில், ஓரிரு இடங்களில், இவ்வாறு பிழையாகச் செய்தால் "ஆசாரி விழுந்து போவான்" என்று பேசப்பட்டுள்ளது சான்றாகும்.

தொழில்நுட்பங்கள் மட்டுமல்ல, **பழந்தமிழர் வாணிகத்திற்கும்,** இந்நூல் சான்று.

இந்நூலின் பல இடங்களில், சரக்கு ஏற்றிச் செல்லும் குறிப்பு வருகிறது.

**தமிழ் அரசர்கள் கடற்போர்** கண்டதற்கும் இதில் குறிப்பு உளது.

தமிழர்கள் கட்டிய கப்பல், பல வருடங்களுக்கு உழைக்கும் என்ற உண்மையையும் நாம் இந்நூலால் உணர்கிறோம். 'கப்பல் பல நாள் ஓடித்திரியும்' என்று இந்நூலில் பல இடங்களில் குறிப்பிடப்படுகிறது.

எனவே, பல்லாற்றானும் தமிழர்தம் கப்பல்கட்டும் தொழில்நுட்ப அறிவை உலகுக்கு எடுத்துச் சொல்ல வல்லதாக இந்நூல் இருப்பதால், இது அச்சில்பதிப்பிக்கப்படுவது தேவையானதாயிற்று.

**பழந்தமிழர் கப்பல் திறன்**

தொல்காப்பியத்திலிருந்து, பல தமிழ் இலக்கியங்களில் தமிழர் கடலோடிய வரலாறு பேசப்படுகிறது.

இலக்கியங்கள் தவிர, தொல்பொருள் சான்றுகளும் தமிழரின் கடலோடிய ஆற்றலைச் சாற்றுகின்றன.

பல்லவர் காலக் காசு ஒன்றில், கப்பலின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது; இதில் பாய்மரம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருப்புடமருதூர் ஓவியத்தில் பாய்மரம் கட்டிய கப்பல் வரையப்பட்டுள்ளது. அராபியர்களும் குதிரைகளும் அதில் பயணம் செல்வதாக உளது.

பட்டினப்பாலை தமிழரின் கடல் திறனுக்குத் தெளிவான எடுத்துக்காட்டுகளை நல்குகிறது.

**முல்லைக்கலியில்,** பாண்டியனின் நாடு கடல்கோளால் குறைவுபடுவதால், அவன் சேர, சோழர்தம் நாடுகளைக் கைக்கொள்ள நேர்ந்த செய்தி உளது. இவ்விலக்கியத்தில், **அம்பி** எனும் சொல் பயிலுகிறது. **ஆயர்கள்,** ஏறு தழுவும் காட்சி, அம்பியைப் பற்றிக் கடலில் செல்வதுபோல இருந்தது என்று பாடுகிறார் முல்லைக்கலி ஆசிரியர் **சோழன் உருத்திரன்.** இந்த அம்பி என்ற சொல்லாட்சியைத்தான், கம்பர் எடுத்தாண்டு,

"ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய ஏழை வேடனுக்கு
எம்பி நின் தம்பி" .என்று பாடினார்.

கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தாகக் கருதப்படும் **சேந்தன் திவாகரம்** பல மரக்கலங்களின் பெயர்களை நல்குகிறது. அவை:-

1. வங்கம்
2. பாதை
3. தோணி
4. யானம்
5. மதலை
6. திமில்
7. பாறு
8. அம்பி
9. பஃறி
10. சதா
11. பாரதி
12. நவ்
13. போதம்
14. தொள்ளை
15. நாவாய்
16. பகடு
17. ஒடம்
18. பட்டிகை
19. படுவை
20. புணை
21. மிதவை
22. தெப்பம்

"உலகு கிளர்ந்தன்ன வுருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கட னீரிடைப் போழ
விரவு மெல்லையு மசைவின் றாகி
விரைசெல லியற்கை வங்கூ ழாட்டக்
கோடுயர் திணிமண லகன்றுறை நீகான்
மாட வொள்ளெரி மருங்கறிந் தொய்ய
வாள்வினைப் பிரிந்த காதலர்..."

என்று அகநானூறு **(255),** தமிழரின் கடல் வரலாற்றைச் சாற்றுகிறது.

"................................................ கூம்போடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅ
விடைப்புலப் பெருவழிச் சொரியுங்
கடற்பஃ றாரத்த நாடுகிழ வோயே"

என்று புறநானூறு, **புகார்** நகரத்தே கலங்கள் சரக்குடன் வந்து சேருவதைச் சாற்றுகிறது.

பரிபாடல் எனும் சங்க இலக்கியத்தில் மரக்கலச்செய்திகள் உள.

இச் சங்க இலக்கியச் செய்திகளெல்லாம் தமிழர் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே கடலோடும் திறனைப் பெற்றிருந்தனர் என்று கூறச் சான்றளிக்கின்றன.

அப்படிப்பட்ட அனுபவமுள்ள தமிழர் நாவாய்சாத்திரம் போன்ற தொழில்நுட்ப நூலைச் செய்ததில் வியப்பென்ன ?

## தமிழரின் வானநூல் அறிவு

நாவாய் சாத்திரம் எனும் இந்நூல், தமிழர்தம் வானநூல் குறிப்பிற்கு ஒரு சான்றாகவே திகழ்கிறது.

வானநூல் அறிவிற்கும் மரக்கலம் செல்வதற்கும் நெருங்கிய தொடர்பு உளது. அஃதாவது, **கோள்களுக்கும் கலங்கள் செல்வதற்கும் நெருங்கிய உறவு உண்டு.**

எடுத்துக்காட்டாக, நமது சிறிய அனுபவத்திலேயே, அமாவாசையன்று கடலலைகள் உயரமாக எழப் பார்க்கிறோமல்லவா ? அவ்வாறு உயரமான அலைகள் எழுவது, கலங்களைப் பாதிக்குமல்லவா ? இதனால், திங்களின் நிலைக்கும் கலத்திற்கும் உறவு ஏற்படுகிறதல்லவா ?

இதுதவிர, மழை, மேகம், காற்று முதலிய வானியல் பண்புகளும் கலங்களைப் பாதிக்கும் என்பது நமது சிற்றறிவுக்கே எட்டுகிறது அல்லவா ?

பழந்தமிழர் இன்னும் மேலே சென்று, மிக நுணுக்கமாக இன்னின்ன கோள்கள் இன்னின்னவாறு இருந்தால், கலம் செல்ல நன்று என்று தெளிவாக வரையறுத்துள்ளனர். இந்நுணுக்கத்தை இந்நூலிலேயே காணலாம்.

கன்னி, தனுசு, மீனம், மிதுனம் ஆகிய நான்கு இலக்கினங்களிலும் நாவாய் புறப்படக்கூடாது என்கிறது நாவாய்சாத்திரம் (பா.148)

நாவாய் சாத்திரம் குறிக்கும் வானநூற் செய்திகளில், கால அடைவில் புகுந்துவிட்ட மூடநம்பிக்கைகள் கலந்திருப்பினும், அவற்றின் அடிப்படை அறிவு நுணுக்கங்கள், அறிவியல் வழியில் ஆயத்தக்கனவே.

நட்சத்திரம், கிரகம் முதலியவற்றுக்கு வெவ்வேறு பெயர்களை எழுதி நம்மை மருட்டுகிறது **நாவாய் சாத்திரம்.**

எடுத்துக்காட்டாக, கார்த்திகை நட்சத்திரம், **ஆரல்** எனக் குறிக்கப்படுகிறது.

பரணியை **அடுப்பு** என்று எழுதுகிறது நூல்.

துலாம் இராசி, **வணிகன்** என்று குறிக்கப்பட்டுள்ளது.

இப்படி நிறையக் குறிக்கலாம்.

## நாவாய் சாத்திரமும் கப்பல் சாத்திரமும்

**கப்பல்சாத்திரம்** நூலின் ஓலைச்சுவடி கி.பி.1698ஆம் ஆண்டில் 'தோன்றியதாக' அதன் பதிப்பாளர் தி.பொ. பழனியப்பபிள்ளை குறித்துள்ளார்.

நாவாய் சாத்திரம் ஓலைச்சுவடியாக எழுதப்பட்ட ஆண்டு கி.பி.1741 என்று முன்பே கண்டோம்.

எனவே, ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் இவ்விரு நூற்களும் எழுந்திருக்கவேண்டும் எனலாம்.

இது மட்டுமல்ல, கப்பல்சாத்திர நூலின் சில பாக்கள், நாவாய்சாத்திர நூலில் சிற்சில வேறுபாடுகளுடன் வருகின்றன! ஆங்காங்கே அடிக்குறிப்பில் இவற்றை எடுத்துக்காட்டியுள்ளேன்.

இதனால், நாவாய்சாத்திரம் எனும் இந்நூலுக்கும், கப்பல்சாத்திர நூலுக்கும் பொதுவான ஒரு கப்பல்நூல் முன்பு இருந்திருக்க வேண்டும் என்ற கருத்து எழுகிறது.

கப்பல்சாத்திர நூலில் உள்ள பாடல்களும் பிழை மலிந்துள; நாவாய்சாத்திர ஓலையில் உள்ள பாக்களும் பிழை மலிந்தேயுள.

கப்பல்சாத்திரம், 46 பாக்கள் கொண்டு திகழ்கிறது; நாவாய்சாத்திரம் 20 பாக்களைக் கொண்டுளது.

கப்பல் சாத்திரத்தில், சில மூலப் பாக்களும், சில பாடலும் உரையுமாக உள்ளதுபோலவே, நாவாய் சாத்திரத்திலும், வெறும்பாடல்களும், உரையுடன் கூடிய பாடல்களும் வரையப்பட்டுள்ளன.

## யுக்தி கல்பதரு

**யுக்தி கல்பதரு** என்ற வடமொழி நூலை எழுதியவர் தார் நகரத்து அரசன் போஜ பிரமாரன் ஆவார். தார் நகரம், மத்தியப்பிரதேசத்தில் உள்ளது. போஜராஜன் எனப்படும் போஜபிரமாரனின் காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு.

யுத்திகல்பதரு, முழுக்க முழுக்கக் கப்பல் பற்றிய செய்திகளைக் கூறும் நூல் அல்ல. அதன் இறுதி எட்டுப் பக்கங்களில் மட்டுமே கப்பல் பற்றிய சுலோகங்கள் உள.

யுக்திகல்பதரு, மணிகள், நவரத்தினங்கள் போன்றவற்றின் செய்திகளைத் தரும் நூலாகும்.

இந்நூல் அச்சிடப்படவில்லை என்று தி.பொ. பழனியப்பபிள்ளை 1950 இல் குறிக்கிறார். ஆனால், 1917 இலேயே கல்கத்தாவில் யுக்திகல்பதரு அச்சிடப்பட்டுள்ளது. இந்நூல் அ.கீ.சு. நூலகத்தில் உள்ளது ( S.1564).

யுக்திகல்பதரு மரக்கலச் செய்திகளைக் கூறுவதால், கி.பி.11 ஆம் நூற்றாண்டையொட்டிய காலகட்டத்தில் தமிழகத்தில் மரக்கல நூற்கள் எழுந்திருக்க வேண்டும் என உணரலாம். ஏனெனில், ம.பி. பகுதியில் கடல் இல்லையாதலால், போஜன், தமிழகத்துக் கல அறிவையே கொண்டு நூல் செய்திருக்க வேண்டும் என எண்ண இடமேற்படுகிறது.

## சொல்லாராய்ச்சி

'நாவாய்' என்ற சொல் வடசொல் என்று குறிக்கிறார் தி.பொ. பழனியப்பபிள்ளை, இது பொருந்தாது.

**'நாவாய்' என்பது தூய தமிழ்ச்சொல்லே.**

'ந' - வேர்ச்சொல்; நகர்வது, ஊர்வது, அசைவது போன்ற பொருள்களைக் கூட்டவல்லது இந்த வேர்.

இவ்வேரின் அடியாக 'நவ்' என்ற சொல்லே மரக்கலத்தைக் குறிக்க எழுந்துள்ளது. இச் சொல்லைத் **திவாகரம்** குறிக்கிறது என்று முன்பே கண்டோம்.

எனவே, அதே வேரிலிருந்து நாவாய் என்ற சொல் வந்தது எனக் கூற ஆய்வு தேவையில்லை.

நாவாய் என்ற சொல்லைத் தந்ததும் தமிழரே, நாவாய் வகைகளைச் சுட்டிச் காட்டியோரும் தமிழரே. வடவர் இப்பணிகளைத் தமிழருக்கு முன் செய்ததாக வாதிடல் இயலாது. ஏனெனில் அங்கெல்லாம் கடற்பகுதிகளே இல்லையே! வடக்கே கடற்பகுதிகளே இல்லாத போது கடல் பற்றிய அறிவுகள் மட்டும் 'குதித்தன' என்று சொல்லமுடியுமா? எனவே, **தெற்கே தமிழர்களிடையே இருந்த கடலறிவு, கப்பலறிவு இவைகளே வடநூற்களில் ஏற்றப்பட்டன** எனக் கோடலாம்.

அகநானூறு எனும் சங்க இலக்கியம், மீசான், நீசான் என்று கூற நாவாய்சாத்திரம், மீசாமன், நீசாமன் என்று பேசுகிறது. பல நூறு ஆண்டுகள் இடைவெளியில் தமிழ்ச்சொற்களில் எங்ஙனம் மாற்றம் நேருகிறது பார்த்தீர்களா ?

**போலி** என்ற தாளவாத்தியம் பற்றி இந்நூல் ஓரிடத்தில் குறிக்கிறது (பாடல் 147).

மரக்கலங்கள் பலவகைப்படும், ஒவ்வொரு வகைக்கும் தனித்தனித் தமிழ்ச்சொல் உள்ளது! ஒவ்வொன்றுக்கும் ஒரு வேறுபாடும் உளது. 'அம்பி' என்பதிலேயே, 'கரிமுக அம்பி', 'பரிமுக அம்பி' என்று எத்தனையோ வகைகளைத் தமிழ் கூறுகிறது,

மரக்கலங்களுக்கு இவ்வளவு நுணுக்கமாகத் தமிழர் பெயரிட்டது போல உலகில் வேறு எங்கும் பெயர் இட்டுள்ளதாகத் தெரியவில்லை.

ஆங்கிலம், Ship, Boat, Raft, Catamaram முதலிய சில பெயர்களைத் தந்தாலும், தமிழில் உள்ளது போல மிகப்பலவான பெயர்களைத் தரவில்லை. Catamaram என்ற ஆங்கிலச் சொல், 'கட்டைமரம்' என்ற தமிழ்ச்சொல்லின் ஆங்கிலத்திரிபே, படகு என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே, boat என்ற ஆங்கிலச் சொல்.

## இலக்கிய இன்பம்

தனிச்சிறப்பு வாய்ந்த தொழில்நுட்ப நூலாக நாவாய் சாத்திரம் திகழ்ந்த போதிலும், இலக்கிய இன்பத்தையும் அது வாரி வழங்குகிறது!

சில பாக்கள் நல்ல சந்த இன்பத்துடன் மிளிர்கின்றன!

சில சொல்லாட்சிகள் படிப்பார்க்கு இன்பம் பயக்கின்றன!

கோள்களுக்கு இந்நூல் தரும் மாற்றுப் பெயர்கள் சுவை தருகின்றன.

'கலம் வெகுநாள் ஓடித்திரியும்'

'சிந்தாத்திரையாய்த் திகழும்'

'சரக்குடன் கலம் அழியும்'

'ஆசாரி விழுந்துபோவான்'

போன்ற தொடர்கள் இலக்கிய நயம் கொண்டவையாக உள்ளன.

## பதிப்புமுறை

நாவாய் சாத்திர ஓலைச்சுவடி பிழை மலிந்ததாக உளது.

பல பாக்களில் ஆங்காங்கே சீர்கள் குறைவுபட்டுள. அடிகள் குறைய வந்தும் பாக்கள் காணப்படுகின்றன. பயின்றுள்ள சீர்களிலும் பிழைகள் கணக்கு வழக்கின்றிப் பெருகிக் காணப்படுகின்றன. 'அசுவனி' என்று வரவேண்டிய சொல், 'அச்சோதி' என வந்தால், எப்படித் திருத்துவது? 'கழித்து' என வரவேண்டிய சொல், 'கிளிதுத்தி' என எழுதப்பட்டிருந்தால், நீங்கள் எப்படித் திருத்துவீர்கள்? இப்படிப்பட்ட பிழைமலிந்த ஓலைச்சுவடியிலிருந்து இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பிழைகள் மலிந்திருந்திருப்பினும், இதில் உள்ள தொழில்நுட்ப அறிவு எவ்வளவேனும் தமிழ் மக்களிடத்தே செல்லவேண்டும் என்ற காரணத்திற்காக இந்நூல் ஒருவாற்றான் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

பாடலில் இல்லாத செய்திகள் சில, உரையில் இடம் பெறக்காண்கிறோம்.

நாவாய்சாத்திர நூலின் இடையே முழுக்க முழுக்க வானியற் பாடல்கள் (சோதிடப்பாக்கள்) நிறைய வருகின்றன. இவை, ஓலைச்சுவடியிலேயே இருந்தவையே. இவற்றில் முன்னும் பின்னும் மரக்கலப் பாக்கள் இருந்தமையாலும், மரக்கலத்திற்கு வானியற் குறிப்புகள் வேண்டப்படுவதாலும், இடையே காணப்பட்ட சோதிடம் சார்ந்த கருத்துகளும், பாடல்களும் பதிப்பிக்கப் படலாயின. நாவாய்சாத்திர நூலின் இடையே பிற்கால ஆசிரியர் சேர்த்தவையா, நாவாய்சாத்திர மூலத்திலேயே இவை எழுதப்பட்டனவா என்று நம்மால் கூற இயலாது.

நாவாய் சாத்திர ஓலைச் சுவடியில் கண்ட சொற்களும், அவற்றைப் பதிப்பித்த முறைகளும் கீழே உள்ள பட்டியலால் துலக்கமுறும்:

| ஓலைச் சுவடியில் உள்ள சொற்கள் | பதிப்பிக்கப்பட்ட வடிவங்கள் |
|---|---|
| 1. அத்திலே | அதிலே |
| 2. அனுழசம் | அனுசம் |
| 3. அவுட்டம் | அவிட்டம் |
| 4. அமுந்த யோகம் | அமிர்த யோகம் |
| 5. அந்த நட்சத்திரம் | அத்த நட்சத்திரம் |
| 6. அதுலே | அதிலே |
| 7. அந்தம் | அத்தம் |
| 8. அனைய நாள் | அநேக நாள் |
| 9. ஆட்சிங்களை | ஆட்சிகளை |
| 10. ஆத்தமிக்க | அத்தமிக்க |
| 11. ஆதற்கு | அதற்கு |
| 12. ஆமரர் | அமரர் |
| 13. ஆனுடம் | அனுடம் |

| | |
|---|---|
| 14. ஆரவு | அரவு |
| 15. அவுட்டம் | அவிட்டம் |
| 16. ஆணியத்து | அணியத்து |
| 17. இல்லாதேசம் | எல்லாதேசம் |
| 18. இரப்ப | இருப்ப |
| 19. இரண்று | இரண்டு |
| 20. இலை | இள |
| 21. இசமான் | எசமான் |
| 22. உடையநாம் | உடையனாம் |
| 23. உலக்கும் | உலகும் |
| 24. உழையம் | உதயம் |
| 25. உன்னும் | உண்ணும் |
| 26. உடலரிவாம் | உடலழிவாம் |
| 27. எண்று | என்று |
| 28. என்டவாறு | என்றவாறு |
| 29. எழாம் | ஏழாம் |
| 30. என்னிய | எண்ணிய |
| 31. என்னி | எண்ணி |
| 32. ஏளு | ஏழு |
| 33. ஏராவிம்பக்கம் | ஏராவின்பக்கம் |
| 34. ஏச்சம் | உச்சம் |
| 35. ஐய்ந்தும் | ஐந்தும் |
| 36. ஒருவருகும் | ஒருவருக்கும் |
| 37. ஒருனாள் | ஒருநாள் |
| 38. ஏடித்திரியும் | ஓடித்திரியும் |
| 39. கணக்கிலேப் பெருக்கி | கணக்கிலே பெருக்கி |
| 40. கன்போம் | கண்போம் |
| 41. கன்னியிதல் | கன்னியில் |
| 42. கனு | கணு |
| 43. கிறெகங்கள் | கிரகங்கள் |
| 44. குரளுறு | குறளுரு |
| 45. கிர்த்தி | கீர்த்தி |
| 46. குபம் | கும்பம் |
| 47. கைய்யும் | கையும் |

| | |
|---|---|
| 48. கோள்கைகள் | கால்கைகள் |
| 49. சத்தே | சற்றே |
| 50. சந்திராாதி | சந்திராதி |
| 51. சிமான் | சீமான் |
| 52. செயிதால் | செய்தால் |
| 53. சிகம் | செகம் |
| 54. தனுமதி | தண்மதி |
| 55. திட்டி | திருட்டி |
| 56. தனிசிலும் | தனுசிலும் |
| 57. தட்டன்னும் | தட்டுண்ணும் |
| 58. திக்கோள் | தீக்கோள் |
| 59. திமை | தீமை |
| 60. திவோனம் | திருவோணம் |
| 61. நற்காலிற் | நற்கோளிற் |
| 62. நடுவுலே | நடுவிலே |
| 63. நாழும் | நாளும் |
| 64. நிற்க்கில் | நிற்கில் |
| 65. நிழ்ச்செயம் | நிச்சயம் |
| 66. நிற்ப்பரே | நிற்பரே |
| 67. நிக்கறவர் | நிற்கிறவர் |
| 68. நிக்கிற் | நிற்கிற் |
| 69. நிற்குற் | நிற்கிற் |
| 70. நிபறி | நிற்ப |
| 71. நிளம் | நீளம் |
| 72. நிண்டால் | நின்றால் |
| 73. நீலத்தை | நிலத்தை |
| 74. நீனை | நினை |
| 75. நீதானித்ததை | நிதானித்ததை |
| 76. நெதி | நீதி |
| 77. பன்னி | பண்ணி |
| 78. பயனம் | பயணம் |
| 79. பன்னும் | பண்ணும் |
| 80. பணிரெண்டு | பனிரெண்டு |

| | |
|---|---|
| 81. பலங்க | பலன்கள் |
| 82. புறிச்சு | பிரித்து |
| 83. புதணில் | புதனில் |
| 84. பூரனம் | பூரணம் |
| 85. புறந்தான் | பிறந்தான் |
| 86. புனும் | பூணும் |
| 87. பிறம | பிரம |
| 88. பாலர் | பாலும் |
| 89. பூறுவ | பூர்வ |
| 90. புணர்தம் | புனர்தம் |
| 91. பின்னெணின் | பின்னெனின் |
| 92. பாத்து | பார்த்து |
| 93. பத்தர்கள் | புத்திரர்கள் |
| 94. பிந்தான் | பிறந்தான் |
| 95. புளக்கும் | பிளக்கும் |
| 96. பன்ன | பண்ண |
| 97. போத்த | போற்ற |
| 98. பொறப்புட்டால் | பிறப்பட்டால் |
| 99. பெரிக்கி | பெருக்கி |
| 100. பேந்தான் | வேந்தன் |
| 101. பவக்கிறகம் | பாவக்கிரகம் |
| 102. பூவழும் | புகழும் |
| 103. பூதன் | புதன் |
| 104. மாண்டலை | மான்டலை |
| 105. மீணம் | மீனம் |
| 106. முளம் | முழம் |
| 107. முகுந்தம் | முகூர்த்தம் |
| 108. முரிபடும் | முறிபடும் |
| 109. முன்னீர் | முந்நீர் |
| 110. மரனம் | மரணம் |
| 111. மான்ட | மாண்ட |
| 112. மூனு | மூணு |

| | | |
|---|---|---|
| 113. | மெவது | மென்பது |
| 114. | மிற்ப | நிற்ப |
| 115. | மியான் | மீயான் |
| 116. | முன்று | மூன்று |
| 117. | மினத்து | மிதுனத்து |
| 118. | மேதை | மிதுனம் |
| 119. | ரெண்று | ரெண்டு |
| 120. | ரோகணி | ரோகிணி |
| 121. | ரேற்ந்து | சேர்ந்து |
| 122. | ராசரசன் | ராசராசன் |
| 123. | வாந்த | வந்த |
| 124. | வெத்தி | வெற்றி |
| 125. | வியாழாம் | வியாழம் |
| 126. | விழாம் | வியாழம் |
| 127. | யெண்றவாறு | யென்றவாறு |
| 128. | னாலு | நாலு |
| 129. | னாலை | நாளை |

மேற்பட்டியலைக் கொண்டு பல்வெறு ஆய்வுகள் நிகழ்த்தலாம். குறிப்பாகச் சுவடியியல் (Manus criptology) தொடர்பான ஆய்வுகளை நிகழ்த்தலாம்.

தமிழுலகில் முதன் முறையாக அச்சில் வெளிவரும் இந்நாவாய் சாத்திரம் மேலும் மேலும் ஆயத்தக்கது. இதிலுள்ள தமிழர் தொழில் நுட்பங்கள் விரிவாக ஆயப்படவேண்டியவை. இதனால் தமிழுலகுக்கு இஃதோர் அணி என்றே கூறலாம்.

அன்புள்ள

**டாக்டர். எஸ். சௌந்தரபாண்டியன்**
எம்.ஏ(தமிழ்)., எம்.ஏ(ஆங்).,  பி.எட்., டிப்.வ.மொ., பிஎச்டி.,
காப்பாட்சியர்
அ.கீ.சு. நூலகம்
சென்னை - 5.

# நாவாய் சாத்திரம்

*(கடவுள் வாழ்த்து)*

*அத்தி முகவனை நித்தம் நினைபவர்*
*சித்தம் கிளர்வுற முத்தி பெறுவரே!*

*ஆதி யெழுதின*
*நாவாய் சாத்திரம்*

தன்னையே பரிதி நோக்கித்
தானினி திருந்த போது
முன்னமே மனைப ரப்பி
முடிப்பதங் கொப்பஞ் செய்து
வன்னதோர் பலகை மூன்று
மாகவே யணைத்த பின்றை
மன்னிய நடுவுங் கூம்பு
மாத்தலை யிரண்டுஞ் சூலம். (1)

சூலமொன் பானில் நிற்கத்
தொக்கநாள் பிறந்த தித்தும்
வாலிபா தாள மொன்று
மலபங்கு பன்னிரண்டு முன்னே
ஏலவே யிருபத் தெட்டும்
எண்ணியே கொள் யிற்றை
கோலிய கூம்பின் மீதே
குறித்தநாள் நடத்து மென்பார். (2)

நடந்த .நாள் பரிதி தன்னை
நாட்டுக வுச்சி மீதே
தொடர்ந்தநாள் வலமா யெண்ணிச்
சொல்லுக நன்மை தீமை
யடந்தரு கூம்பின் மீண்டு
மனுவுடன் வங்கம் பாழாம்
கிடந்தபின் னணியுஞ் சூலம்
கிளம்பிடின் முறியு மென்பார். (3)

---

*அத்திமுகவன் - பிள்ளையார்*

*1. பரிதி - சூரியன்*

*2. பிறந்ததித்தும் - "பிறந்திலாலும்" எனக் கப்பல்சாத்திர நூலிற் குறிக்கப்படுகிறது. பிறத்திலாலும் என்ற பாடமே சரியானது.*

முறிந்தன அடியி நாளும்
முதல்வன் பரமாங்கே
பிறந்தன மனுக்க ளெல்லாம்
பின்வரத் தலையி லுண்மை
அறிந்தவர் தெரிந்து கொண்டு
அணியமேற் புறத்து ஆறுஞ்
சிறந்ததோர் பதியிற் சென்று
சேர்ந்தினி திருக்கு மென்றார். (4)

திருந்திய கத்து முன்னாள்
செய்துயீ ராறுஞ் செப்பில்
அருந்தியே ஒடு மென்பர்
அணிமரக் கலங்க ளெல்லாம்
பொருந்திய ஒரை சாலப்
போற்றிய வண்ணஞ் செப்பில்
வருந்திய மிதுனங் கன்னி
வான்சிலை மீன மாகா. (5)

ஆகா தெனவே யண்டி
ஆகிய ஒரை செப்பில்
மாகாயம் குண்டை கும்பம்
மகரமே சிங்க மேடம்
நாவாய்கொள் நாளில் தானும்
நன்றென வகுத்த வாறே
நீகாமர் தாமுறச் சொன்னார்
நின்றிடில் வியாழ வெள்ளி. (6)

---

4. *"அடிநாளாகில் மனுவும் வங்கமும் வேறுபட்டழிந்துபோம. அமாபிற நாள் மூன்றும் அக்கரையில் பாடா வீதி கிடக்கும். உள்ளகத் தாறு நாளும் மேலாரையில் மிகுதி இத்தமம் சீக்கிரத்தில் வந்து துறை சேரும். உள்ளகத்துக் கீழை அறை ஆறு நாளும் வருத்தப்பட்டுத் துறைபிடிக்குமென்பது இயல்பு. உரையும் காலமுஞ் சொல்வது மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இதுனாலு ராசியும் ஆகாதென்றறியவும்" என்ற கப்பல்சாத்திரப் பாடல் 25இன உரை இங்கு கருத்தக்கது.*

5. *மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இந்நான்கு இராசிகளும் ஆகாதவை என்று குறிப்பிடப்படுகிறது.*

6. *ரிஷபம், கும்பம், மகரம், விருச்சிகம் - இந்நான்கு இராசிகளும் உகந்த இராசிகளாம்.*

வெள்ளிதன் கால ஓரை
மிகுத்திடும் நீர தென்றார்
எள்ளிய திங்கள் அங்கு
உகந்து நீருறு மென்றார்
வள்ளிய புந்தி தன்னில்
மரம்பல நெரியு மென்றார்
தெள்ளிய சனியுஞ் செய்யுஞ்
செங்கதிர் தானும் பொல்லா. (7)

பொல்லா தெனவே யெண்ணிடில்
பொருந்தியே வியாழம் நன்றென்
றெல்லாருஞ் சொன்னார் என்றெடுத்
றெடுத்தவை யனைத்தும்
நல்லாறை யுதையங் கொண்டு
நாகத்தைக் கழித்துப் போட்டே
அல்லாத தீக்கோ ளெல்லாம்
அகற்றுக வென்று ரைத்தார். (8)

உரைத்த பன்னிரண்டு பாகமும்
உகந்த நாளா றதாகும்
நிரைத்தநாள் பின்ன கத்து
நின்றன நின்ற தென்றார்
வரைத்தநாள் ஆறும்
வருத்தமே உள்ள தானும்
புரைத்ததன் பிறந்த நாட்கள்
பொருந்திடா மற்ற தெல்லாம். (9)

என்றபின் கூம்பிற் சூலம்
இறைவனார் மானம் என்பர்
கன்றிய அணியச் சூலம்
கருதியே மனுக் காகா
ஒன்றிய அமரச் சூலம்
உடைந்திடும் நாவா யோடில்
நன்றல்ல பாதாள நாளும்
நாடிய மறக்க லாகா. (10)

---

*7. "வெள்ளி ஓரை நீர் காட்டும். சந்திரனாகில், காயப்படுத்தும். புதனாகில் பாய்மரம் முறியும். சூரியனும், அங்காரகனும் மந்தனும் ஆகாத நாளென்றறியவும்" என்று கப்பல்சாத்திர நூலின் (பாடல் 27) உரை இவண் கருதத்தக்கது.*

*8. " எல்லா ஓரையும் வியாழ ஓரையினும் வியாழக்கிரகமும் கொண்டு செய்யவும்" என்ற கப்பல்சாத்திர நூல்(பா.28) உரை ஒப்பு நோக்கற்பாலது.*

ஆனவை யகமே நிற்க
ஆக்கிய கணித மெல்லாம்
தேன்மொழி மாத ரோடு
செப்புக உண்மை யாக
ஊனமில் யோக நோக்கி
உகந்தவை பலவுங் கொண்டு
ஆனந்தப் புரவி தன்னை
அகற்றுக வென்று சொன்னார். (11)

கூம்பின்மேல் சூல நாவாய்
குறையினால் துறையில் கேடா
தாம்படு மணியச் சூலம்
தாழ்ந்திடும் மையம் தன்னில்
ஓம்படும் அமரச் சூலம்
உண்மையே கரைகண் டாகித்
தாம்படு மெனவுஞ் சொன்னார்
தகைவில்லா நூல்வல் லோரே. (12)

அணியநாள் பிறநாள் ஆகில்
அக்கரைப் பட்டோ ராண்டில்
பிணியினால் மன்னர் கொள்வர்
பேணிய அமர நாளில்
துணிவினால் இக்க ரைக்கே
துணிந்துட னிருக்கு மென்க
பணியும்பா தாள நாளில்
பாதியும் பாடா வாரி. (13)

கருக்கறக் குருடு பொல்லா
நாட்களில் கலங்கள் செய்யில்
அருக்கனும் சனியும் செவ்வாய்
அனைத்துடன் நிற்கு மாகில்
மரக்கலம் நாவா யோடு
சரக்குடன் அழிவுண் டாகும்
வருத்தமாம் தீக்கோள் சேரில்
வேண்டிடா தென்று சொன்னார். (14)

---

*12. கப்பல் சாத்திர நூலின் பாடல் 28 இவண் ஒப்பிடத் தகுந்ததே.*

*14. மரக்கலம் செய்வதற்கே நல்லநாள் பார்க்க வேண்டும் என்ற கருத்து நுவலப்படுகிறது.*

மிகுதியாங் கன்னி செல்லும்
வில்லெனும் ராசி தன்னில்
கருதியே கலன்கள் செய்வார்
கருகவே யிறக்க வேண்டாம்
மிகைபடச் செய்வீ ராகில்
வேண்டினி துரைக்க லுண்டோ?
தகைவிலா வங்கந் தானுந்
தகர்ந்துடன் கேட தாமே. (15)

கொள்ளுநாள் ராசி தன்னில்
கூறிய கோள்கள் நிற்கில்
வள்ளலாக் கருமங் கேடாம்
மரக்கலங் கழிகை மெய்யே
வெள்ளமாம் வியாழன் வெள்ளி
விரிதிரை நீருண் டாகும்
கள்ளவிழ் கோதை மாதே
கணக்கிது நெறிதப் பாதே. (16)

ஏராவை யீரைந் தாக்கி
இரண்டுமூன்று என்று நன்மை
ஓராத ஆறும் ஏழும்
என்பதும் தருவா மெட்டும்
கூராக வங்கம் பாழாம்
நிலத்திடு நாலு மஞ்சிங்
காராருங் குழலா பத்து
கர்த்தாவின் மரண மாமே. (17)

மரணமாங் கர்த்தா வுக்கு
மையமே குற்ற மாகில்
சரணமாம் அம்பு குற்றந்
தக்கநற் பாரி சாவா
யிரணமா மணியக் குற்ற
மீதினில் ஓடா விசைவாய்
தரணிபேர் அறியச் சொன்னார்
சங்கரி பங்க தாமே. (18)

---

*15. வில் - தனுசு இராசி*
*இப்பாடல், கப்பல் சாத்திரநூலின் பாடல் 34 உடன் ஒப்பிடத்தக்கது. ஒரே பாடல் இரு நூற்களிலும் பயின்றுள.*

*18. தரணிபேர் - உலகமக்கள்*

ஏராவின் நீள மெனதாரு
மென்றிடுமோர் முழங்கொள் விரலைத்
தோராத எட்டி னாலே
பெருக்கித் தொகை யான தெல்லாம்
சீராரும் இருபத் தேழில்
கழிக்கச் சிதைவித்து நின்ற சேடம்
ஆராயும் மசுபதி முதலாக
எண்ணி யறிந்துசொல் வங்க நாளே. (19)

உரைவங்க நாளும் உடையான்றன் நாளும்
உடனொன்ற நின்ற விதியாம்
உரைவின்கண் ணறிவரு கின்ற நாளு
உடனே பொருந்த உரைநீதி
திரைதுன்று வங்கம் விரிகின்ற சங்கு
திரிகின்ற வாரி முழுதுங்
துறைதுன்ற வென்றி தரவெங்கு மோடி
நொடியின்கண் வங்கம் வருமே. (20)

நாவாயின் முன்முறிந் தாக்கில் முக்கால்
நவவுரைக் ருடன்றதினைக் கொண்ட
ஓவாத இருபத் தேழ்தனில் நின்ற
உகைபுற விழுதல் நின்ற நாளாம்
பாவாய்கொள் தன்னுடனே தலைவ னாற்குப்
பாங்காக வேமுகூர்த்தம் பார்த்துக் கொள்ளே (21)

---

*19. "ஏராவின் நீளத்தை அளந்து, ஒரு முழத்துக்கு 24 அங்குலமாகப் பெருக்கிக் கண்ட தொகையை 27இல் கழித்து நின்ற சேஷத்தை(மீதியை) இத்தனை யென்று, அசுவினி தொட்டு எண்ணிக், கண்டநாள் வங்கநாள்" என்ற கப்பல்சாத்திர நூல் பாடலின் உரை இவண் கருதத்தக்கது.*

*20. "வங்க நாளும் முதலாளி நாளும் ஒன்றாயிருக்க வேண்டும். மிகுதியும் நல்லது. பொருந்தாத நாளும் பசை நாளும் ஆகாது. ஒரு நாளாக இருந்தாலும் பொருந்தின நாளாக இருந்தாலும் இதற்கு உறவான நாளாக இருந்தாலும் எந்தத் துறைக்கும் சிந்தாதாதிரையே ஓடிப்போய்ச் சிந்தாத துறையே வருமென்பது." என்ற கப்பல்சாத்திரப் பாடல்(7) உரை இவண் நினையத் தக்கது.*

## *ஆதாயஞ் செலவு*

ஆதாயங், கண்ட முழத்தை எட்டில் பெருக்கிப் பண்ணி, இரண்டுக் கீய்ந்து, நின்ற சேஷம் வரது.

செலவறியும்படி, கண்ட முழத்தை ஒன்பதில் பெருக்கிப் பத்துக் கீய்ந்து, நின்ற சேஷம் செலவு.

## *கண்ணடை யறியும் படி*

காலையெழு கதிராகிற் கனசுஞ் சேரும்
 கரியாகில் மிக்க தோசம் கடலிலே கேடாம்
மாலையெழு பிறையாகில் வாழ்வு கூடும்
 மங்கையர்தன் சீரடியே மடந்தை கேடு
காலுடன் எண்மழுவாகிற் கடலிற் கேடாம்
 கண்டருளீர் ஏராவின் கண்ணடைகள் தானே (22)

மந்தன் கிடாவடியே மரண மாகும்
 மானினடி வாணியமாம் வரவான சங்குநன்றாங்
கொந்தலர் சேரு ஏராவினடி மானங் காட்டும்
 குதிரையடி மிகவோடிக் குறுகு மென்றார்
வேந்தன்மிகுஞ் சக்கரமே
 வெண்டரளப் பூவாகில் விரைந்தோடுங் கலமே (23)

## சுழிக்குற்றம்

நாடிய ஐந்து தன்னில்
 நாயகன் மரண மென்னத்
தேடிய அஞ்ச தாகில்
 தேசம்விட் டகன்று போகும்
வாடிய பந்த தாகில்
 வகுத்ததோர் வங்கம் பாழாம்
சாடிய சுழிகள் தன்னில்
 தனித்தனிப் பாடா வாரி (24)

---

*ஆதாயம் : கண்டமுழம் - இருக்கின்ற நீள அளவு. ஈய்ந்து - வகுத்து சேஷம் - மீதி*

*23. ஓலையில் ஓரடி விடுப்பட்டுள்ளது.*

கிளையுடன் பதங்கள் நாலிற்
கேடெனப் பாரி லோரும்
கழையுடன் அணிய நோக்கிற்
கருதி மயனுக் காகா
மலைவுடன் கடலிற் கொண்டு
வீடும் தந்தக் கூடம்பும் பாயும் (25)

ஆமை போலே யிருக்கப் பொல்லாது, தேள் போலே யிருக்கப் பொல்லாது, வண்டு போலே யிருக்கப் பொல்லாது, பசுவின் பாதம் பொல்லாது, நேண்டு போலே யிருக்கப் பொல்லாது, காகபாதம் பொல்லாது, நயனமுழி பொல்லாது, யீர்ச் சீறிப் பிரித்தல் பொல்லாது, சக்கரம் பொல்லாது, தனி தனியான குருவடை நன்று. இது கண்ணடைக் குருவடை பாத்துக் கொள்ளவும். (26)

## சதாவின் குற்றம்

கறுப்புச் சதாய் பொல்லாது, வெள்ளைச் சதாய் நன்று, தோலோடு குற்றம் இரண்டாய்ப் பிரிக்கலாகாது. மூன்றாம் பதம் முப்பதாம் பதமும் பொல்லாது, என் கன்றுடன் வண்டேறல் காவிய பதத்தில் தின்றால் கொட்டுஞ் செல்வம் (?)..... யதோர் மரத்தின் கொத்தி மிண்டிய துளையில் கொள்ளில் மேதினி தன்னிற் கேடாம், எண்டிசை யெல்லாம் போற்றும் யியல்வுடன் தேறலைப் பே ? (27)

என்றது, வண்டேறு குற்றம், ரெண்டாம் பதம், நாலாம் பதம், ஏழாம் பதம். ஒன்பதாம் பதம், மூன்றாம் பதம், எட்டாம் பதம், பொல்லா தென்றபடி.

---

*25. ஈற்றடியில் சீர்கள் விடுபட்டன.*

*27. இப்பகுதியில் உள்ள பாடலுக்கு வேண்டிய சீர்கள் ஓலையில் இல்லாததால் ஓலையில் உள்ளபடியே தரப்பட்டுள்ளது.*

# மரம் வெட்டிவரச் சாத்திரம்

கெட்ட நேரத்தில் ராசிக்குள்ள விஷம் அந்த மாதத்துக்கு மறுவிடத்திலே குற்ற மென்று அறிவது.

நீளமடைய வேண்டினால் உண்டே ராசியில், நாழியை அஞ்சிற் பெருக்கிக் கண்ட துகை நீள மென்பது.

அவ்விராசியை ஒன்றரையாகப் பெருக்கிக் கண்டது கைச்சுற்று என அறிவது.

அவ்விராசி நின்றயிடத்தில் தலைமரம் விழுமென்பது இடப்பக்கத்துக்கு அந்தப்படியே ஆம்.

மிதுனத்துக்கு உள் வூாசலாம் கர்க்கடகத்துக்கு இரண்டாய்ப் பிரித்திருக்கும். சிகை மதலை மரம் பருத்திரம் (?);

கன்னியும் துலாமும் நீண்டிருக்கும்.

விருட்சம் நேரிதாயிருக்கும்.

மதலை வளைந்து கொடிமரத்து நீளம் விழுந்திருக்கும்.

மகரமும் கும்பமும் மீனமும் நடுப்பருத்திருக்கும்.

மரம் வெட்டுவாய், மஞ்சள் நிறமாகில், உடும்பு வாழும், கறுப்பாகில், பாம்பு வாழும், தயிலம் போல் இருக்கில் தேள், குனில் வண்ணமாகில் எலி; சிவப்பாகில் தவளை மிகுதி; சிவப்பாகில் பல்லிவாழ்ந்தமரம் என்பதுமாம்.

வெட்டுவாய் சரிக்கில், கீழே கல்லுண்டு,
இந்த மரங்களானது,

தெள்ளிய ஒற்றை யாகில்
திருந்திய நன்மை யாகும்
உள்ளதில் இரட்டை யாகில்
உண்மையாய்க் கேடே யாகும்
வள்ளிய பண்டி நாதர்
மரம்பல ஓடா தென்றார்
தெள்ளிய வியாழம் நிற்கில்
தீமைகள் தொடர்பு றாமே! (28)

காலுடன் முழங்கல் வைக்கில்
கருகவே தன்மை யாகும்
சேலுடன் விழியி னாளே
செவ்வாய் கலமிக ஓடாது! (29)

ஐந்தாமிடம் கரையிலே அடையும்.
ஆறாமிடம் சீனிப்பல முறியும்.
12-மிடம் உடையவனுக்குப்
பொல்லாது.
அருக்கன் மூன்றாமிடம் ஆனால்
மிட முறியும்.
எட்டாமிடம் சுக்கான் முறியும்.
11-மிடம் கரை காணாது.
இராகுக்கு ஏழு பாரிலோடும்.

மேடத்தில் அஞ்ச தாகும்
இடபத்தில் ஏழே முக்கால்
நாடுநற் கடகம் அஞ்சாம்
நல்லதோர் சிங்கம் நாலாம்
நீடொத்த துலாத்தில் நாலாம்
நிசசயம் ...... மூன்றாம்
நாடாத்த யிராசி தானும்
கரையினிற் சேரு மென்றார். (30)

புகழுடன் சனியே நிற்கில்
போற்றிவரக் காத்துக் கொள்ளும்
குதிரில்லா அணிய மையம்
பழுதற நீரே காட்டும்
நிகரில்லா வமர பாதா
நிகர முழம் ஒன்றில் நீராம்
பகரிலா முனிவர் சொன்னார்
பழுதறத் தெரிந்து கொள்ளே. (31)

பாரோடு புந்தி தானும்
பழதற யலவ நிற்கில்
சீரோடு மோரத் தானுஞ்
சிதைவுடனே நீயு மேற்க
காரிதா னாற தாகில்
கருதிடு நீர தென்று
வாரிச முலையி னாளே
வகுந்த நூல்கள் தானே! (32)

புகழுடன் துலாங்கள் நிற்கில்
பொங்கிய நன்மை யெய்தும்
பகலருஞ் சிங்குந் தன்னில்
பழுதறக் கடலி லோடும்
நிகரிலா விடபத் திங்க
ளோரையோ தம்மைக் காட்டும்
பகரில்லா பொன்னு மேத்திப்
பழுதறக் கரையில் சேரும். (33)

முறிந்தன கால்க ளாகி
முட்டிய பத்தி சுக்கான்
செறிந்தநற் கடலில் வீழும்
சேந்தநல் வரைய தாகில்
மறந்தநற் பீலிப் பாரம்
மற்றுந்தன் முறியு மென்க
செறிந்தநற் பாசை வேந்தன்
செகமுத விதானம் செப்பினானே. (34)

கூறெடுத்து மாகாவில் அணியத்து வலது புறத்திலே வெட்டி வாங்கி அண்டையிட, அந்தக் குற்றம் தீரும். இரத்தம் பொலியுடையவனுக்கு பிறவுஞ் செய்யும். சம்பானுக்குக் குற்றம் தீரும்படி ஏராவை யளந்து எட்டாக மடித்து மூன்று மடிப்பு விட்டு, இரண்டு மடிப்பெடுத்து, அதை மூன்று பாகை பண்ணி, அதிலே இரண்டு பாகை விட்டு, ஒரு பாகையை மாகாவில் மத்தியிலே வலது புறத்திலே வெட்டி வாங்கி அண்டையிட அந்தக்குற்றம் தீரும். மனிதர் பலி கொள்ளுகிற் சம்பானுக்குக் குற்றம் தீரும்படி யோராவை அளந்து ஒன்பதாக மடித்து, அதிலே எட்டுக்கூறு விட்டு, ஒரு கூறை எடுத்துப் பதினாறு பாகை செய்து, பத்து விட்டு, ஆறு பாகை எடுத்து, மாகாவில் அஞ்சு முழத்துக்கு மேல் அளந்து கண்ட சேஷம், வெட்டி வாங்கவும். அதில் பஞ்சைத் திரட்டி வைத்து வெட்டவும். மருதினால் சூடும்சம்பானுக்கு.

பாலும் தேனும் நெய்யும்
பழமுடன் மஞ்சள் சாறும்
காலுறு பவள முப்பும்
கடுகுறு மிளநீர்க் கெந்தம்
வேலுறு மணியே சல்லம்
அமரமு மேகக் கொண்டால்
மால்செறி நீரை யாட்டம்
மருவிய கரையிற் சேரும்! (35)

சேர்ந்தநல் மஞ்சள் தேனும்
நெய்யொடு சந்த னங்கள்
வாய்ந்ததோர் துளசி வில்வச்
சருகுடன் கோட்ட மண்ணும்
காய்ந்ததோர் கனலி விட்டுக்
கதிய தூபங் காட்டிப்
போந்தஅடைச் சுதைகள் போட
பூசைகள் விரும்பு மன்றோ! (36)

வாத்திமஞ் திசைகள் மாறி
வகுத்தநல் லேரா வைக்கில்
கூத்தமாம் வரவு தீரும்
குத்தமும் கேடே சொல்லும்
தேத்ததோர் நாவாய் தன்னை
திசையிற்று மாலை செய்யப்
பாத்திபன் தன்னைக் கண்ட
பனியது போலே யோடும்! (37)

தானாம் புரட்டை யாடி
தயங்கிய தனிப்பங் கூனி
யீனமா கதைதன்னில்
யியல்புடன் ஆனார் வைக்கில்
மானவேல் விழியி னாளே
வகுத்ததோர் நாவா யாழும்
ஈனமாய் ஆண்டு தன்னில்
இயல்புடன் கேட தாமே! (38)

மண்ணிற் பீட மிட்டு
வகுத்ததோர் வாழை நாட்டி
துன்னிய கரும்பு வாழை
துளையிள நீருந் தூக்கி
கன்னிய நூல்வ ளைத்துக்
கருநிறக் குடங்கள் வைத்து
வன்னமா யரங்கி ளேகி(?)
வகுத்தபூ பூவிளங்க ளிட்டு (39)

முந்தவே நாட்கள் பார்த்து
முழுநாட்கள் தெரிந்து கொண்டு
அந்தஆ சாரி யற்கு
அடைவுடன் பட்டுங் கையில்
முந்தவே மோதி ரங்கள்
மூட்டுங்காற் கலங்கள் வைத்து
ஆகர மாசாரிய ....................
அடவுடன் கிழக்கே முன்பாய்ப் (40)

பாகுடன் நூல்கள் போட்டுப்
பரிவுடன் அறைவ குத்துத்
தாவிய பஞ்ச வண்ணந்
தனித்தனிப் பரப்பிக் கொண்டு
மேவுநல் விளக்கு மிட்டு
மெய்யுறப் பிண்டம் வைத்துத்
தாவிய மாலை தன்னை
தவமேறச் செய்து கொண்டு (41)

கொண்டுநல் வாழை தெங்குக்
குலையுடன் கமுகின் பாளை
மண்டல விளக்குத் தீபம்
மலரொடு பண்ணி யாரம்
யெண்டிறை யெங்கும்நீ ராட்டி
இடுபலி மேடத் தோடு
அன்றரும் வானந் தன்னில்
அருபியை வணங்கிக் கொள்ளே! (42)

உடலது ஏரா வாக
உயர்ந்ததோர் மகர மீதில்
தடல்மத காட்டு காலாஞ்
தாங்கிய சவனபச னான(?)
அடல்செறி கோதை மாதே
அழகிய வயறா தஞ்சு
இடமதா முனிவர் சொன்னார்
இயல்தெரி நூலை யாய்ந்தே! (43)

அறிவில் தமிழாகிய உத்திரஞ்
செறிவில் முப்பூரஞ் சிதைத்தனர்
நெறிபடுங் குழலாள் இதை
நேரிலோ முறிபடும் கலம்
முன்னீரி பின்தன்னுளே மூங்கில்
முரசு ருத்திராடம் பனைதாங்கு பூசம்
அவுட்டந் தரணிய லோங்குதற்காலம் வைத்திடில்
முகந்தீங்கதென்று திருந்திய சேவமே! (44)

குருட்டுநாள் பொல்லா நாளிற்
கோலிப் பகவங்கள் செய்யில்
அருக்கனும் சோமன் தானும்
அனைத்துட நிற்கு மாகில்
மரக்கலம் நாய னோடும்
சரக்கொடு விசன முண்டாம்
விருத்தமாந் தீக்கோள் நிற்கில்
வென்றிலர் என்றுஞ் சொன்னார்! (45)

---

*44. பாடல் செம்மையாக ஓலையில் இல்லை.*

*45. சோமன் - செவ்வாய்*

நிலமது கோவி லாகா
நிறைசெயும் பழன மாகா
கலமது வேடட லாகா
தாவிய புறத்து மாகா
நிலமதிற் கறிக ளாகா
நீடும்நற் சயனை யாகா
கடையினிற் றமியர் காக்க
கருதிய தவறு மப்பே! (46)

தகாரி மகரம் நன்மை
தனித்தகைவு தண்டு
பகைவற்காந் துளையே நன்னி
பலமிகுத் தென்போற் கில்லை
மிகுகுடம் கடலிற் றாழும்
மீள்பொருள் கேடு கன்னி
திகைபிழைத் தோடும் பெற்ற
இலாபம் ஒன்றில்லை தானே! (47)

வாரமுற வாரமும் நம்துவக்குங்
வானவர்தம் குருவும் மற்றைச்
சோரிதத்தைப் பருகவுணர் குருவுமென்ற
சொல்லவினி நல்லதென்றங்
காரியொடு சேயிரவி களித்த தெல்லாம்
கண்டமிவை கலமிறக்க எடுக்க லாகா
பூரண பொற்குடம் பலித்து வினித்தோர் தங்கள்
புக்கிருந்த செங்கமலப் பொற்பி னாளே! (48)

எடுக்குற வங்கத்தார் விறுக்கிட்ட நாட்கொடுக்கும்
கொடுக்கும் கோளொட்டி ராசிகள் பக்கமும்
அடுக்குமாகா
அனைத்துடன் நாடல் அணித்து
எடுக்கும் போதுமித் தரளமென் சொல்லவோ! (48அ)

வாரி தாழவும் வாழ்ய்ந்தபசு கன்தன்னை
சேரவே யிருபாலுடன் சேரவுங்
காருலாங் குழலாய் இவைதக் கூடவும்கூடித்
தங்கம் கொடுக்கவும் கொள்பவோ
கோடு திகைக்கவுங் கோள்புழல் பார்க்கவும்
இருபின்னாளொடு கோளொட்டி ராசிகள்
சோடி கண்குரு டாமிது கொள்கேன்
அப்படி யினமீதுக்கு உரைசெய்தானாம்! (49)

சோதியொடு ஓணமிதுன மூன்றும்
மிருபூசம்
பாதைமுதல் ஆனகலம் நீரில்விடும்
நாளாம்
மாதுளை நற்சாடி சுறவோடில்
அலவனோடில்
வாதையிலை மானே கோள்நன்று
தருமென்றார்! (50)

ஓங்கல் மீதணைந்த கூம்பு யரத்தினால்
உணர்ந்துவளை
நீங்காத உத்திரங்கள் மூன்றுலக்கை
செக்குடன்
காம்பு கலத்தினோடு கரைநன்
கவாமெனப்
பாங்கதாம் இராசிகள் படிகலத்துத்
தாழ்ந்திடேல்! (51)

வாணிகன் சூழும் கரமோடு அலவனும்
பேணி விருட்சிகம் நல்லமற் றிருப்ப
பாணி மீதிலோடு கப்பல் பாய்மரம் எடுக்கவே
நவமீன்க ளென்று சொல்லி முன்னையோர் நவின்றதே! (52)

வைத்ததோர் குத்தி தன்னில்
மங்கைசேர் மாலை செய்தால்
உற்றதோர் நாவாய் தானும்
உண்மையாம் நிதியங் கொண்டு
பெற்றதோர் கரையிற் சேரும்
பேணது துறையிற் செய்தால்
மற்றுள்ள பலியுங் கொள்ளா
மனுப்பலி கொள்ளு மென்பார்! (53)

பக்க நடுவுட சுழிகள்
பாரிலுற வோட்டு
மிக்க நடுவுட சுழிகள்
மீகாமற் காகா
தொக்க நடுவுட சுழிகள்
தோன்றினா லவைகள்தாம்
மிக்க வருசெல்வம்
மிகவளிக்குந் தானே! (54)

மாவினொடு சுளகோரா மூன்றுங்
கமழும் செய்கை தனுவான வத்தங்
காவிபொரு விழிமடவாய் தாழிகேட்டை
கணடயிவை கலமிறக்க எடுக்கலாகா
தாவுபரி திரள்கவிதை தண்டு காணான்
தடமுக்கு தடவுமுயர் ததிவேழம்
பாவலர்கள் பேருதவு ராசை வேந்தன்
பன்னுதமிழ் குண்ணமெனப் பகரு வாயே. (55)

---

*50. பாடல் தெளிவாக ஓலையில் இல்லை.*
*(52.) சீர்கள் செம்மையாக ஓலையில் இல*
*வாணிகன் - துலாராசி, பாணி - நீர்*

கொண்டதோர் இரவி நின்ற
குணதிசை காலை நீட்டி
திண்டிற லான ஏழாம்
இடத்தில் சரத்தை வைத்துச்
சண்டவே அடியது திருப்பவான
சமுக்கில்
வண்டணி குழலி னாளே
வரத்துமங் கிடைக்கு மென்றார்! (56)

சித்திரைக்கு மேஷத்திலே காலுந்துலாத்திலே தலையுமாகக் கிடப்பன; வையாசிக்கு ரிஷபத்திலே காலும் விருட்சத்திலே தலையுமாய் இரண்டு மாதமுங் கிழக்கு மேற்காக வடக்கே முகமாய்க் கிடப்பன; ஆனிக்குத் தென்கிழக்கே காலும் வடமேற்கே தனுவிலே தலையுமாகக் கிடப்பன; ஆடிக்குக் காதிலே தலையும் கர்க்கடகத்திலே காலுமாய்க் கிடப்பன; ஆவணிக் கும்பத்திலே தலையுஞ் சிங்கத்திலே காலுமாக இரண்டு மாதமுங் கிழக்கே முகமாய்க் கிடப்பன; புரட்டாதிக்கு மீனத்திலே தலையும் கன்னியிலே காலும் வடகிழக்கு மூலையும் தென்மேற்கு மூலையுமாகக் கிடக்கும்; அற்பசிக்குத் துலாத்திலே காலும் மேஷத்திலே தலையுமாகக் கிடப்பன; கார்த்திகைக்கு விருட்சத்திலே காலும் ரிஷபத்திலே தலையுமாக, இரண்டு மாதமுங் தெற்கே முகமாய்க் கிடப்பன; மார்கழிக்குத் தனுவிலே காலும் மிதுனத்திலே தலையுமாகத் தென்கிழக்கு வடமேற்குமாகக் கிடப்பன; தைக்கு கரத்திலே காலும் கர்க்கடகத்திலே தலையுமாகக் கிடப்பன; மாசிக் கும்பத்திலே காலும் சிங்கத்திலே தலையுமாகத் தெற்கு வடக்காக மேற்கு முகமாய்க் கிடப்பன; பங்குனிக்கு மீனத்தில் காலும் கன்னியிலே தலையுமாக வடகிழக்குத் தென்மேற்குமாகக் கிடப்பன என்றவாறு,

மேஷம் ரிஷபங் கன்னி வில்முன்தலை
மிதுனம் நாடு குமரி கும்பம் - நடுவிடமாம்
நீடிய மின்னேமகரந் தேள்மீனம் கடகம்
இவைபின்னே விருஷ்சமெனப் பேசு! (57)

பூமலர் பாதம் போற்றி
புவனிதன் னருளி னாலே
தூமலர்க் கடவுள் சொன்ன
சோதிட மதனுக் கொப்பாம்
பாமலர்த் தமிழி னாலே
பகர்ந்தனர் யாதோ வென்னில்
காமநற் கலங்க ளோட
கட்டினார் கணித நூலே! (58)

---

*56. சமுக்கு - தூர திருட்டிக் கண்ணாடி அல்லது காந்த ஊசிப் பெட்டி*
*57. வெண்பாத் தளைகள் பிறழ வந்துள.*

தன்னையே பரிதி நோக்கித்
தானினி திருந்த போது
முன்னமே மணல்ப ரப்பி
முடிப்பதங் கோர்ப்பப் பச்சூன்
சொன்னதே பலகை உண்டாய்
ஆகவே யணைத்துப் பின்னே
மன்னிய நடுவு டம்பு
மாதலை மூன்றுஞ் சூலம்! (59)

சூலமு மொன்ற நிற்ப
தொக்கநாள் புறம்ப தாறும்
வாலிய பாதாள மொன்று
பன்னி ரெண்டுள் நிற்க
வேலவே இருபத் தெட்டும்
எண்ணியே கொள்க வித்தை
கோலியே நம்பின் மீதே
குறித்தநாள் கடத்து மென்றார்! (60)

நடந்தபின் பழுதி னாளை
நாட்டுக வுச்சி மீது
தொடர்ந்தநாள் வலம தெண்ணிச்
சொல்லுக நன்மை தீமை
வடந்தரு கூம்பில் மூன்றும்
வலுவுடன் வங்கம் பாடாம்
கிடந்தன அணியச் சூலம்
கிளம்பிடில் முறியு மென்றார்! (61)

முறிந்தபின் நடுவு நாளில்
முதல்வன் மூணு மங்கே
பிறந்தன மனுக்க ளெல்லாம்
பின்னவர் தலைப்பி னுண்மை
பிறந்தன பின்னில் மூன்று
பின்பு றத்தில் மூன்றுஞ்
செறிந்ததோர் பதியிற் சென்று
சேர்ந்தினி திருக்கு மென்றார்! (62)

செறிந்தன வங்கமுன் பின்னாள்
கேளீ ராறு செப்பில்
வருந்தியே ஓடு மென்க
மரக்கல மான தெல்லாம்
பொருந்திய வொன்றாம் கலமே
போவதன் வண்ணஞ் செப்பில்
திருந்திய மிதுனங் கன்னி
திண்சிலை மீன மாகா. (63)

ஆகாத தெதுவன் றறிய
ஆகிய ஓரை செப்பில்
மாகாயம் குண்டைக் கும்பம்
மகரமு மேடம் ஏற்று
நாவாய்கொள் கன்னி தேள்
உண்டென்று வகுத்துப் பின்னை
மீகாமர் தாமுன் சொன்னார்
விரும்பினர் வியாழம் வெள்ளி (64)

வெள்ளிதன் கால ஓரை
மிகுதியே நீர தென்க
வெள்ளிய திங்க ளாகில்
உரம்பல முறியு மென்க
தெள்ளிய சனியுஞ் சேயுந்
திருந்திடிற் றீரும் பொல்லார்! (65)

பொல்லாத தென்கவே யன்றிப்
பொருந்திய வியாழம் என்று
எல்லாருஞ் சொன்னார் முன்னே
எடுத்துவை அனைத்து நூலின்
நல்லாரை யுதையங் கொண்டு
நாசத்தைக் கழிப்பூப் பின்று
மல்லாத கோள்த னையும்
அகற்றுக எனவு ரைத்தார். (66)

உரைத்தவன் னிரண்டிற் பாதி
உகந்தநாள் அரசர்க் காகும்
நிரைத்தநாள் பின்வரத் துண்டே
நாள் நன்றி தன்னை
உரைத்தநாள் ஆறும் வருந்திடு
முன்ன தானும்
உரைத்தனர் புறத்து நாட்கள்
பொருந்திடா மற்ற தெல்லாம். (67)

எல்லையாம் ராசி தன்னில்
இசைந்தவங் கிசத்தி னோடே
சொல்லிய வாறு மாகும்
சோர்விலா வண்ண மெண்ணில்
நல்லகோள் நிற்கக் கொண்டு
நாட்கேகு மகிட மெல்லாம்
தொல்லையே ஒடு மங்கு
தொடர்சின்னம் உரைக்க லுற்றேன். (68)

---

*65. ஓலையில் மூன்று அடிகளே உள.*

*67. சீர்கள் பிழைபட அமைந்துள ஓலையில்*

உற்றநாள் மதியந் தோய்ந்த
உறுதியின் நாளைக் கொண்டு
பற்றிய கூம்பு தன்னில்
மத்திமம் பதித்த பின்னர்
பெற்றதோர் அணியம் காண
பேசிய வங்கத் திற்கு
உற்றநாள் வலம தாறும்
வந்தநா ளென்று மேறார். (69)

என்றபின் கூம்பிற் கோலி
இறைவனே மான மென்க
கன்றிய வணியச் சூலங்
கருமங்கள் செய்வார்க் காகா
வென்றிய வடியைப் பற்றி
லுடைந்திடு நாவாய் போகா
நன்றல்ல மீகா மற்கு
நாடிய புறக்கண் ணாகா. (70)

காணவை பிறந்து நிற்கில்
காட்டிய கணித மெல்லாஞ்
தேனமாங் குழலி னாளே
செப்புக நன்மை தீமை
ஊனமாம் யோக நீக்கி
உகந்தவை பலவுங் கொண்டு
வானநற் புரவி பரணம்
அகற்றியே கொள்க என்றார். (71)

கொண்டன வாழை தென்னங்
குலையோடு கமுகு பாளை
மண்டல விளக்குக் கம்பம்
மலரொடு பண்ணி யாரம்
எண்டிசை யெங்கும் நாட்டி
இடும்பலி மேடத் தோடும்
பெண்டிகு பிள்ளை யோடும்
பிணக்கற விருத்திக் கொள்ளே. (72)

---

*71. புரவி - அசுவனி நட்சத்திரம்*
*பரணம் - பரணி நட்சத்திரம்*

கொள்ளுமா முகூர்த்த மெல்லாம்
        கோலடிக் கண்ணே கூம்பே
தெள்ளிய பாம்பி னோடு
        தெரிந்தவை நான்கு மாகிக்
கள்ளவிழ் கோதை மாதே
        காட்டிய கணித மெல்லாம்
புள்ளிதான் படாத வண்ணம்
        போற்றுக கணித நூற்கே. (73)

எண்ணிய சூல மொன்பான்
        இசைந்தபா தாள மாக
நண்ணிய புறநா ணாறும்
        நாட்கள் மதிப்ப தென்க
தண்ணறுங் குழலி னாளே
        தடங்க லோட வங்கம்
பண்ணவும் பணிகள் செய்யப்
        பாய்புறங் காட்ட நன்றே. (74)

எண்ணுநாள் இருபத் தெட்டில் இசைந்தால்
நண்ணி கூம்பு நடுச்சூலந்
தன்னிலமாக் கலந்தா னெடுக்கத்
தெண்டினாள் மூன்றிற் றிரைகடலில் தாமுமாஞ் சென்று. (75)

கூம்பின்மேல் சூல மாகில்
        குறைவிலா நாவா யாங்கே
தாம்படு துறையி லங்கு
        தடுத்துடன் மாச்சூலம்
தேம்படு மையந் தன்னில்
        திறம்படப் பாயு மென்ப
ஓம்படு மென்று நின்று
        உரைத்தனர் தமிழை ஆய்ந்தோர்! (76)

செப்பினோம் ஆறிரண்டு நாளாகில்
        இசைந்ததற்பின்
தப்பிலா வாறிரண்டில் தான்வைக்கில்
எப்போதும் சிந்தாத்திரை செய்யும் செல்வமா
கிப்பெருகி வந்தார் செகமதிக்க வந்து. (77)

---

*75. சீர்கள் விடுபட்டுள.*

*77. சீர்கள் செம்மையாக இல.*

புகழ்தரு கலங்க ளோடிச்
சால வேற்கும் நன்றாம்
இகழ்தரு இடபத் தோடில்
ஏதுமோர் நன்மை யில்லை
வகையுடன் மிதுனத் தோடில்
மாற்றலா தமதா வங்கம்
திகழ்தரு கடகத் தோடில்
செல்வமே பெருகு மென்றார். (78)

சிங்கமே ஓடு மாகில்
நன்மை யுண்டாம்
மங்கையர் தன்னி லோடில்
வழிதிகைத் தோடு மென்க
துங்கமாத் துலாத்தி லோடில்
தோன்றிய நெறி யுண்டாகும்
யெங்குமாம் விருச்சி கத்தே
யாத்திரை யில்லை யென்றார். (79)

தங்கிட தனுவி லோடில்
தகையுண்டாம் கடவ நன்று
பொங்கிய கும்ப மாகிப்
பொருகடல் தன்னுட் போகும்
மங்கிய மீனந் தன்னில்
வான்பொருள் கேட தாகும்
வங்கம தோடும் ஓரை
வகைதெரிந் துரைக்கு மென்றார். (80)

பக்கநாள் கிழமை தீக்கோள்
என்றிவை பகரிற் றீமை
மிக்கநல் வியாழம் வெள்ளி
சமைந்ததன் உதயந் தன்னில்
மிக்கநாள் கண்ட யோகம்
என்றுள குற்ற மெல்லாம்
புக்கிடம் அறியா தேகும்
பொருந்துமக் கரும நன்றே. (81)

---

*79. சிங்கம், துலாம், விருச்சிகம் - இராசிகள்*
*மங்கை - கன்யா ராசி*

மப்பிடு வோரை தன்னில்
மனஞ்செய் கடலில் ஓடல்
செப்பிதால் சந்திரன் துவாதசத்திற்
சற்றுமே சார்ந்து நிற்ப
வந்திரந் தப்பா தென்றே
அகத்தியன் அருளிச் செய்தார். (82)

கலம்வைக்கில் சந்திரனும் வெள்ளியும்
ஏழில் நிற்க
விண்ணின்மேல் பச்சூனை நோக்கில்
அளவற்ற பலனு ரைக்க
சுக்கிரனும் ஓரிரண்டில்
பீதகனும் ஒக்க மன்றிடத்தில். (83)

சந்திரனும் நேரொக்க நிற்கச் செய்தே
ஓடுமென்ன நதியுங் கைக்கொண்டு
வெற்றியுடன் மீளும் விரைந்து. (83அ)

கொள்ளுமூன்று திறங்க ளற்ற
மேமாதி பூசம்
புள்ளிமான் பூண்ட வோணம்
அனுஷம் சோதி
கள்ளமிழ் மரக்க லங்கள்
கருத்துடன் கடலி லோடில்
கொள்ளுமார் சிவயோ கங்கள்
குறைவிலா வளர்பக் கத்தே. (84)

பக்கமாந் திருட்டி நவமி
நாட்கள் சேர்ந்த நாளும்
தக்கதோர் விட்டி தேமந்
தானிவை யொன்று மாகா
மிக்கொடிகள் உதயமும் இவையே
யாகிற்
புக்கிடு உருக்கள் மாதே
பொருதிறை யதனுள் ளென்றார். (85)

---

*83,84 பாக்கள் செம்மையாக ஓலையில் கிடைத்தில.*
*84,85 - சீர்கள் நிறைவாக இல*
*84. புள்ளிமான்- மிருகசீரம், யோணம் - திருவோணம்*
*வளர்பக்கம் - வளர்பிறை*

உத்தமம் மத்திமம் அதமம் சார்ந்த
உபய மாகி
மத்தகுக் கிடையு நான்கும்
ஆறிரண் டொன்று மூன்றின்
மெத்தகு கதிரோ நிற்க
விரும்பிய கடல தோடில்
வெத்திசைச் செலவு மாங்கே
இலாபமு ண்டாகுங் காணே! (86)

ஆதியா லடுப்புச் சதையமும்
ஓது கேட்டை யோணம் மகம்
மீது தீதறு சோதி நெறிமுறைச் செங்கையாய்
வாதினாற் கலம் வைத்திடில் மாட்சியே. (87)

அறிவெனு மனுஷமோ டுத்திரஞ்
செறியு மூலமுப் புரம்சி தைத்தநாள்
நெறியருங் குழலாய் இவை ஒக்கிலே
முறிபடுங் கலமு முன்னில் தனுளே. (88)

மூங்கில் பூர முருளுத் திராடம்
தாங்கு காலத்தன. (89)

ஆதித்தன் சென்றடைந்தால் ஆற்றமா
ஆற்றமா ராசி தன்னில்
சாதித்த நற்கலங்கள் சாவாகும்
சோதித்த பாயொடு கூம்பும் பலசரக்கு
மேற்றுவரே மாயாதே வங்க மீது. (90)

ஆதியோன் அனுஷம் மகசிரஞ்
சோதி அத்தமே பதியென்றிவை
ஓதினார் கலமொடு கரைக்காமென
நாதனார் சொன்ன நாழிகை நல்லதே. (91)

அசுவனி பரணி செவ்வாய்
ஆதிரை அரவி னோடு
நசிய புரமூன்று நகுக்கலந்
தன்னிற் கேடாம்
இச்சையாஞ் சோதி கொள்ளில்
இரையவன் மரண மாமே. (92)

---

*87. அருப்பு - பரணி நட்சத்திரம், ஓணம் - திருவோண நட்சத்திரம்.*
*90. சீர்கள் செம்மையாக ஒலையில் கிடைத்தில.*

ஆன புனர்தமுடன் அச்ச மகயிரு
ஊனமில் லரவோன் முயர்தோணி - மானனையீர்
இட்டி நிறுத்திருகண் ணென்று மிவையேழும்
ஓடம் எடுக்கவே நன்று. (93)

மேடங் கோல்சிலையாம் விருச்சிகம் கர்க்கடகம்
ஓடும் உயர்கும்பம் நீடிய வற்றைப்
போல்தா னோக்கி வந்தவளவர் ஓரையெல்லாம்
பாரினிற் போமே பரிந்து. (94)

அருக்கனை யாதல் மிக்க
அழகிய மதியை யாதல்
நெருக்கிய அரவு தீண்டில்
நிறைமுதல் ஓரையி னாலும்
தருக்கிய நிலமே யென்ன
வந்தடையும் கடலோடு வங்கம்
எடுக்கினும் வாரி இசைப்பினும்
மிடவண் டாமே. (95)

வாழ்த்துமன் கோள்மான மாதங்கள்
வங்கம் வைத்து
போற்றிநீர் கடலில் பாய்ச்சிப்
பரப்பிலாத் தேவ ரான
மாத்திரை தனினுனே மனுவுடன்
வங்கம் பாடாம்
பாத்திரங் கெடுக்குந் தன்னைப்
படைத்தவன் தனக்கு மாங்கே. (95அ)

அணியநாள் பிறநா ளாகில்
அக்கரைப் பட்டா ராகில்
திணிவுடன் மீளு மென்க
தடுத்துடன் மரண நாளில்
மனிதருங் கடலி லோடில்
வளமுடன் மீளு மென்பர்
பணிவுபா தாள நாளில்
பதிவுறு பாடா வாரி! (95ஆ)

---

*93. இட்டி - ஈட்டி - கேட்டை நட்சத்திரம்.*
*94. சிலை - தனுசு இராசி, மேடம் - மேஷம் என அறியப்படும இராசி.*
*95. அருக்கன் - சூரியன். மதி - சந்திரன்*
*95. பாடாவாரி - "அசுப நட்சத்திரங்கள்" எனப்படுவன.*

குருட்டுநாள் பொல்லா நாளிற்
கோலிநற் கலங்கள் செய்யார்
அருக்கனார் சனியுஞ் செவ்வாய்
தனுவுடன் நிற்கு மாகில்
மரக்கல நாய னோடு
சரக்கழி வாகு மென்பர்
இருக்கமதாய்க் கோலி நிற்கில்
ஏலாது கரும மென்றார். (96)

மிதுனமும் கன்னி செல்லும்
வில்லெனும் ராசி தன்னில்
கதுவியே கலங்கள் செய்யார்
கடுகியே நிற்க வென்றார்
போனது போக்கிற் செய்வீ ராகில்
தானினி துரைப்ப துண்டோ
தகையுண்டாம் வங்கந் தானே. (97)

வாழ்த்துமன் நின்ற ராசி
நன்றல்ல உதையத்தில்
விரிஞ்சன்முன் மொழிந்த நாளும்
மிகுமுர சுத்திராடம்
திருந்திய பூசம் பரணிச் சிறிய அவிட்டன்
இருந்தொழில் யானை இலங்கிய ஓணமெல்லாம்
போந்தநாள் எனவு ரைத்தார்
போற்றிமா முனிவர் தாமே. (98)

ஏராவின் நீளம் எனதாகு மென்றுவிடு
ஓரா முழுங்கள் விரலால்
சோராமல் மூவெட்டி னாலே பெருக்குத்
தொகையான இவைதான்
சரராச இருபத்தேழ் தன்னினோடு
சிதைவித்தே சேடமதனால்
ஆராயும் அசுபதி முதலாக
எண்ணியறி நீசொல் வங்க தினமே. (99)

உரவங்க நாளும் உடையாநல் நாளும்
உடனொன்ற ஒன்ற
உரைநீர் புரைவின்கண் ஒன்றி வருகின்ற நாளும்
உடனே பொருந்த உரைநீ
திரைகின்ற வங்கம் விரைகின்ற சங்கு
நிறைகின்ற வாரி முழுதும்
துறைதுன்ற வென்றி தரவெங்கு மோடி
நேர்கின்ற வங்கம் வருமே! (100)

---

*97. மூன்றாமடியில் சில சீர்கள் இல.*

உத்தமநாள் தெரிந்துரைக்கில் முன்னோர் சொன்ன
ரோகணியும் பூசமுடன் ஓணஞ் செக்கு
வைத்தமுரசு ரேவதியும் வகுத்துப் பின்னை
மத்திமநாள விட்டமொடு புணர்ந்த நாளும்
உத்திர மச்வினிபரணை யாடி தன்னொடு
உணர்த்திய நான்குரைக்கில் யோக மோரை
வைத்தவிரு கண்ணும் யிறகுபோல் துறைக்குவாய்க்கும்
மிகுதிவரில் வகுத்தி டாயே! (101)

அதந்தனை நீளம் பத்தி
அடித்தநன் மைய
வதந்தன்னால் வரங்க வந்து
அசுபதி முதல்நா ளாக
இதன்கடை தலைகா லிடை
நாளு மிராக்கத கணமு
முதல்வன்றன் பகைநட் பானும்
உண்டவக் கணமா காதே. (102)

தக்கதொரு ஏராவிற் பக்கநடு
வுட்சுழிகள் பல்பொருளும் சேதமா
மிக்க மரச்சுழிகள் மீகாமற் காகா
தொக்கநடு வுட்சுழியிற் தோன்றிடுவர் சாவர்
தக்கதொரு சுழிகள் தானணிய நோக்கிடின்
மிக்கதொரு செல்வ மிகவழிக்குந் தானே! (103)

ஒன்றிரண்டு மூன்றனைய ஓரஞ்சு பொல்லாது
ஒன்பதுடன் ஏழஞ்சு ஒருதட் டுண்ணு
மன்றிலங்கு மாறஞ்சு யிருநாலு மானம்வைத்த
தோணியத்தின் முதலா வைத்துக்
கொன்றயந்தார் முடியண்ணல் மிகுநலத்தைக் கொடுப்பன்
கொம்பனையாய் யிருதிக்குங் குகையாகக்
கொன்றுபண்டி யிகழ்ந்தவனு மிகநலத்தைக் கொடுப்பன்
பத்தாகக் கூறிட்டுப் பலனைப் பாரே! (104)

கொச்சையரி வேங்கைகொடு கனலாகும்
கச்சணியும் விந்தைமகர் என்றுமணல் தாங்கும்
கச்சுலவும் தனகும்பம் காட்டும்
நச்சலவன் மீனம்நல மிதுகாணே. (105)

இந்திரன் திசையை நோக்கி
இரவிமேல் எழுந்தி ருந்தும்
மந்தர கிரியைச் சூழ
வலமது வாக உந்து
சந்திக டோறு மாங்கே
சந்திரர் மூன்றே முக்கால்
வந்து தோன்று மாங்கே
வாத்துமன் கிடக்கு மாறே. (106)

ஆண்டர சறுதி மாசறுதி
அற்றை நாளின் காலறுதி
மூன்றுண்ட இராசி தானறுதி
முகூர்த்தங் கொள்ளும் கோனறுதி
வேண்டா மென்றார் முகூர்த்தமுடன்
வென்றிச் செல்வர் மிகையாலே
மாண்டார் மாண்டதல் லாது
வாழ்ந்தேக மாட்டாரே. (107)

## நட்சத்திரம் 27

1. அசுவணி
2. பரணி
3. கார்த்திகை
4. ரிசபம்
5. மேஷம்
6. கார்த்திகை முக்காலும்,

ரோகிணியும், மிருகசீரிஷத்தில் முன்னோரையும், ரிஷபம், மிருக சீரிஷத்தில் பின்னோரையும், திருவாதிரையும், புனர்பூசத்து முக்காலும், மிதுனம் புனர்பூசத்துப் பிற்காலும், பூசமும் ஆயிலியமும், கடகம் மாகமும், பூரமும் உத்திரத்தின் காலும், சிங்கம் உத்திரத்தின் முக்காலும், அத்தமும் சித்திரை முன்னரையும், கன்னி, சித்திரையின் அரையும், சுவாதியும், விசாகத்தின் முக்காலும், துலாம், விசாகத்தின் பிற்காலும், அனுஷமும் கேட்டையும் விருஷ்சிகம் மூலமும், பூராடமும், உத்திராடத்தின் காலும், தனுசு உத்திராடத்தின் முக்காலும், திருவோணமும், அவிட்ட முன்னரையும், மாகம் அவிட்டத்தின் பின்னரையும், சதையமும், பூரட்டாத்தின் முக்காலும், கும்பம் பூரட்டாதி பிற்காலும், உத்திரட்டாதியும், ரேவதியும் மீனம் ஆக நட்சத்திரம்.

# சென்மநாள் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 1. | அசுவனி | - | சென்மநாள் |
| 2. | பரணி | - | பொருந்தும் |
| 3. | கார்த்திகை | - | சென்மநாள் |
| 4. | ரோகிணி | - | பொருந்தும் |
| 5. | மிருகசீரிஷம் | - | சென்மநாள் |
| 6. | திருவாதிரை | - | பொருந்தும் |
| 7. | புனர்பூசம் | - | சென்மநாள் |
| 8. | பூசம் | - | பொருந்தும் |
| 9. | ஆயில்யம் | - | பொருந்தும் |
| 10. | மகம் | - | சென்மநாள் |
| 11. | பூரம் | - | பொருந்தும் |
| 12. | உத்திரம் | - | சென்மநாள் |
| 13. | அஸ்தம் | - | பொருந்தும் |
| 14. | சித்திரை | - | சென்மநாள் |
| 15. | சுவாதி | - | பொருந்தும் |
| 16. | விசாகம் | - | சென்மநாள் |
| 17. | அனுஷம் | - | பொருந்தும் |
| 18. | கேட்டை | - | பொருந்தும் |
| 19. | மூலம் | - | சென்மநாள் |
| 20. | பூராடம் | - | பொருந்தும் |
| 21. | உத்திராடம் | - | சென்மநாள் |
| 22. | திருவோணம் | - | பொருந்தும் |
| 23. | அவிட்டம் | - | சென்மநாள் |
| 24. | சதையம் | - | பொருந்தும் |
| 25. | பூரட்டாதி | - | சென்மநாள் |
| 26. | உத்திரட்டாதி | - | பொருந்தும் |
| 27. | ரேவதி | - | பொருந்தும் |

## இராசி 12

| | | | |
|---|---|---|---|
| 1. | மேஷம் | - | 4 1/4 |
| 2. | ரிஷபம் | - | 4 3/4 |
| 3. | மிதுனம் | - | 5 1/4 |
| 4. | கடகம் | - | 5 1/2 |
| 5. | சிங்கம் | - | 5 1/4 |
| 6. | கன்னி | - | 5 |
| 7. | துலாம் | - | 5 |
| 8. | விருச்சிகம் | - | 5 1/4 |
| 9. | தனுசு | - | 5 1/4 |
| 10. | மகரம் | - | 5 1/4 |
| 11. | கும்பம் | - | 4 3/4 |
| 12. | மீனம் | - | 4 1/4 |

- ஆக ராசி 12



| | | | |
|---|---|---|---|
| 1. | ஞாயிறு | - | சூரியன் |
| 2. | திங்கள் | - | சந்திரன் |
| 3. | செவ்வாய் | - | செவ்வாய் |
| 4. | புதன் | - | புதன் |
| 5. | வியாழன் | - | குரு |
| 6. | வெள்ளி | - | சுக்கிரன் |
| 7. | சனி | - | சனி |

இவர்க ளேழும் தினம் ஒருவருக்கு இரண்டரை நாழிகை போசிப்பு, வலமாகச் சுற்றி வருவார்கள்.

ஆதிரை பரணி யாரால்
அரவு பூரங்கேட்டை திருவிசாகம்
சோதி சித்திரை மாகம் ஈராறும்
மாதனம் கொடுத்தார் தாரார்
வழிநடைப் பட்டார் மீளார்
பாயினிற் கொண்டார் ஆகார்
பாம்பின்வாய்த் தேரை தானே. (108)

சித்திரை சமுத்திர யாத்திரை, அசுவனி, அவிட்டம், ரேவதி, அனுஷம், அத்தம், சோதி, மிருகசீரிஷம், திருவோணம் இந்த நாட்களில் துலாமுறையமாக, வெள்ளி, புதன், இந்த வாரங்களிலே சமுத்திர யாத்திரை போகில் மிகவும் யாபிக்கு மென்றவாறு.

குண்டைமாக குடங்கள் எட்டு
கொடியதேள் பத்தாகும்
நன்றுகோ லிரண்டை தாகும்
நலமேட மஞ்சதாகும்
தின்றிறல் சிங்கந் தன்னில்
சிறந்தமூ வேழதாகும்
வண்டணி குழலி னாளே
வாழ்த்துமன் திக்கி வற்றை. (109)

அஞ்சில் மகமும் அனுஷம் ஒருமூன்றும்
ஒன்பதிற் கார்த்திகையும் ஒரெட்டு ரோகிணியும்
நன்கு உத்திரமும் நாளதில் கலங்கள் செய்யில்
விசும்பின்மா ரேயாயினும் துஞ்சுவாரவ் வாண்டைக்குள்ளே. (110)

என்றது, பஞ்சமியும் மகமும் அனுஷமும், திருதியையும், கார்த்திகையும், அஷ்டமி ரோகிணியும் சதுர்த்தியும் உத்திராடங் கூடின நாளில் ஏரா ஓடில் தேவேந்திரனானாலும் அவ்வாண்டில் மரண மென்றவாறு.

ஆதியும் நடுவும் ஆகா
அனுஷமும் பூரமும் ஆகா
சோதியும் விசாகமு மாகா
சொல்லிடில் சதைய மாகா
ஓதிய ஓணந் தண்ணில்
ஒளிதிகழ் கலங்கள் செய்யில்
பாதியும் பாடாவாரி பண்டையோர் நூலே. (111)

என்றது,
சொன்ன நாளில் ஏரா ஓடில் ஆகாது; திருவோணமாகில் பாதிநாள் பாடாம் என்றவாறு.

அச்வினி பரணி யாரால்
ஆதிரை யரவி னோடு
நிச்சித்த பூர மூன்றும்
நெடுங்கைகட் கோடக் கேடாம்
உச்சித்த சோதிக் கோள்
உடையவன் பொருளுங் கேடாம்
நிச்சயம் சதையம் கொள்ளில்
நீகாமன் இறப்பரே. (112)

என்றது,
யாத்திரைக்கு அசுவனியும் பரணியும் கார்த்திகையும், ஆயில்யமும் பூரங்கள் மூன்றும் கேடாம். சோதியும் கேட்டையும் உடையவன் பொருள் கேடாம். சதையமாகில் நீகாமன் உயிரிழக்கு மென்றவாறு.

---

*112. நீகாமன் - கப்பல் ஓட்டுபவன்.*

அத்த ஆதிமுதல் ஈராறு நான்குநாள்
சித்த யோகம் நாட்டிலை யாகிலே
வைத்த நற்கலம் ஆழியின் சுழியின்
பத்து நாளையிற் பாதிய தாகுமே. (113)

என்றது,

அத்தத்துக்கு 12 நாள், சதையம் 4, விசாகமும் நல்ல யோகமும் இல்லாமல் ஓர் கடலின் சுழியிலே பத்து நாளையிலே, ஒன்றிரண்டா மென்றவாறு.

**யாத்திரைக்கு**

ஆதி யோணம் அனுஷம் ரேவதி
சோதி மான்றலை சொல்லிடில் அத்தமும்
ஓத மாகட லோடுதற்காம் என்று
நாதனார் சொன்னார் இவை நல்லதே! (114)

என்றது,

அசுவனி, திருவோணம், அனுஷம், இரேவதி, சோதி, மிருகசீரிஷம், அத்தமும், மிகவும் நல்லதென்று நாதனார் சொன்னா ரென்றவாறு.

மூங்கில் முரசுடு ளுத்திரம் பனை
தாங்கு பூசம் அவிட்டம் தரணியில்
ஓங்கு நற்கலம் வைத்திடில்
தீங்க தன்றித் திருந்திய செல்வமே. (115.)

என்றது,

புனர்பூசம், உத்திரட்டாதி, ரோகினி, உத்திரம், அனுஷம், பூசம், அவிட்டம் இந்நாட்களில் இராசியிலே ஏரா வோடில் தீங்கற் றிருந்திடு மென்றவாறு.

காலத்த தலையத்த நாளில்
மாலுத்த நற்கலமதிள் கோபுர
மனைகோலினும் அழிவாம்!
ஏவொத்த கண்மட மாதே
விவாகம் செய்யில் விதவையாம்!
ஞாலத்தவர் சொன்னாரிது நிசமே! (116)

---

*113. பாதியாகும் - உடைந்து இரண்டாகும். உரையிலும் இதையே, "ஒன்றிரண்டாகும்" என்றுளார். ஆசிரியர். அத்தம்-"ஹஸ்தம்" என அறியப்படும் நட்சத்திரம்.*

*114. பாடலில் அசுவனி நட்சத்திரம் "ஆதி" என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளதை பார்க்கலாம். மான்தலை - மிருகசீரிஷ நட்சத்திரம். இந்நட்சத்திரம் மானின் தலையைப் போலிருக்கும்.*

*115. உருள் - ரோகினி, முரசு - உத்திரட்டாதி, மூங்கில் - புனர்பூசம், பனை - அனுஷம், உருள் - சக்கரம்*

*116. காலற்றநாள் - கார்த்திகை நட்சத்திரம் வரும்நாள்*
*தலையற்ற நாள் - புனர்பூசம் நட்சத்திரம் வரும் நாள்*
*ஞாலத்தவர் - உலகத்தோர்.*

என்றது,

காலத்தநாள் - கார்த்திகை, இடையத்த நாள் - மிருக சீரிஷம், தலையத்த நாள் - பூனர்பூசம் இப்படிப் புரிந்த நாட்களில் பரவைக் கலம், திருமதிள், திருக்கோபுரம், மனையுங் கோலில் அழிவாம், கலியாணஞ் செய்யில் விதவையாம் என்றவாறு

அறிவன் அத்தம் அனுஷமோ ருத்திரம்
செறிவில் மூலமும் பூரஞ் சிதைத்த
நெறிப்படும் குழலா ளிவை நோக்கிலே
முறிப்படுங் கலம் முன்நீர் தனுளே. (117)

என்றது,

உத்திரட்டாதி, அத்தமு, மனுஷமும், உத்திர, மூலமும், பூரமும், முறியும் என்றவாறு.

## (நேரிசை வெண்பா)

ஏரா கொடுதி யிகல்மிக நீர்வார்த்தல்
சேராநயன மில்லாநாட் சேருமே - ஏரா
பதிபுகுதும் வெற்றிப் பரவை கடந்தப்பால்
நதிபுகுது மென்றே நினை! (118)

என்றது,

கொடுதி யடிக்கவும், பூசவும், நீர்வார்த்துக் கழுவவும்
குருட்டு நாளில் செய்யவும், சத்திராவியோ டெதிர்க்கவும்,
வெற்றிபண்ணிக்கொண்டு சமுத்திரத்தைக் கடந்துபோய்
நதி கொண்டு வருமென்றவாறு.

சோதி எதிர்கோள் முதல்மூன்று மிருபூசம்
பாதி மரக்கலம் நீரில்விடுநாளாம் - மாது
கயல்சாடி சுறவோ டலவனோ டுலவ
அயல்மாநதி கொணர்ந்துவரு மன்றே. (119)

---

*117. அறிவன் - உத்திரட்டாதி நட்சத்திரம்*
*உத்திரட்டாதி, அத்தம், அனுஷம், உத்திரம், மூலம், பூரம் ஆகிய நட்சத்திரங்களில் நாவாய் செலுததினால், அநநாவாய் முறிந்துபடும் என்பது பாடற் கருத்து.*

*118. கொடுதி - மரஆணி, நயனமில்லா நாள் - குருட்டுநாள், சததிராவி - எதிரி*

*119. சீர்கள் ஒழுங்காக இல*

என்றது,

சோதி எதிராவது, உத்திரம் அத்தம் சித்திரை எதிரினும் சோனை யாகிய திருவோண முதல் புனர்பூசமும்இறக்கவும், நீரில் விடவும் உத்தமம். கன்னி, மீன்,தள்ளிய கும்பம், கர்க்கடக லெக்கினத்தில் யிறக்கவும், **யாத்திரை மரம்** என்றவாறு.

ஆதி கார் அடுப்புச் சதையமும்
ஓது கேட்டையோ யோட மகம்
தீதில் சோதி செழுமுறஞ் செங்கைப்பார்
பேசில் நற்கலம் வைத்திடில் நன்கறியே. (120)

என்றது,

அசுவனி, கார்த்திகை, பரணி, சதயம், கேட்டை, திருவோணம், சோதி விசாகம், திருவாதிரை, ரோகிணியும் **ஏரா ஓடவும்**, யாத்திரைக்கும் ஒக்கும் என்றவாறு.

கொள்ளுமூன் றுத்திரம் அஸ்தமோ
டாதி பூசம்
புள்ளிமான் திருவோணம்
புனர்தமே யனுஷம் சோதி
கொள்ளுமாம் புள்ளி தேளுக்
கோதிலாக் கடலி லோடக்
கொள்ளுமே சுபயோ கங்கள்
குறைவில்லா வளர்பக் கத்தே. (121)

என்றது,

உத்திரம் 3, அஸ்தம், அசுபதி, பூசம், மகரம், திருவோணம், புனர்பூசம், அனுஷம், சோதியாகில் அமுர்த யோகத்திலே வளர் பக்கங்களிலே யாத்திரை போகி லுத்தம மென்றவாறு.

உத்தமம் மத்திமம் அதம்
சாத்திர முபைய மாகும்
மத்தகு கடைநான் காகும்
மாறிரண் டொன்று மூன்றில்
மொத்தநற் கோள்கள் நிற்க
விரும்பியோ கடலி லோடி
அத்திசை சேரிலும் கோரிலாப
முண்டாகும் காணே! (122)

என்றது,

கடகம், துலாம், மகரம், மேடம் 4, ராசியும் உத்தமம். இடபம், சிங்கம், கும்பம், விருச்சிகம் 4 ராசியும், மத்திமம். மிதுனம், கன்னி, தனுசு, மீனம் 4, இந்த அதமமான ராசி நாலும், 4 மிடம் 12 மிடம் லெக்கின மூன்றாமிடம் சுபக்கோள் நிற்கில் என்றவாறு.

---

*122. 4 மிடம் - நான்காம் இடம.*

தாண்டு குதிரை யவிட்டம்
ரேவதி அத்தம் சோதி
தூண்டு மான்றலை யோடோணம்
தலையேழ் கடலிற் போகில்
ஈண்டிய நிதியும் போகும்
எழிற் கடலில் அழிவாம்
மாண்ட புரட்டை மாசி
ஆடிநாள் மாதர்க் காகா! (123)

என்றது,

அசுபதி, அவிட்டம், ரேவதி, அனுஷம், அத்தம், சோதி மிருக சீரிஷம், திருவோணம், யாத்திரைக்குத் தள்ளப் பெறும். வெள்ளிக்கிழமை, புதன், பூரட்டாதி, மகம், உத்திரட்டம் பெண்கள் யாத்திரைக்கு ஆகாதென்றவாறு.

எத்திசை தன்னில் தானும்
இரவிதா னிற்கு
அத்திசை காலை நாட்டி
அத்துக்கேழில் தலையை வைத்து
மெத்தென இடக்கை கீழாய்
வலக்கைதான் மேல தாக
மைத்தடங் கண்ணி னாளே
வாஸ்துமன் கிடக்கும் வாறே! (124)

என்றது,

ஆதித்தன் யாதொரு ராசி இருந்தான், அந்த ராசியிலே காலை நீட்டி, அதற்கேழில் தலையை வைத்து, இடக்கை கீழாக வலக்கை மேலதாகக் கிடப்பன் என்றவாறு.

கன்னி தலைதெற்கு
கதிரவன் தலை கிழக்கு
முன்னு சிலலை மான்றலை
குடக்கினொடு தெற்காம்
துன்னு பாலா டெருது
முடி மேற்கா
மன்னு குளிரானி ஆடி
ஆவணி முடிவடக்கே! (125)

என்றது,

புரட்டாசியும், அற்பசியும், கார்த்திகையும் கிழக்கே தலை, மார்கழி, தை மாசி தெற்கே தலை, பங்குனி சித்திரை வைகாசி மாதம் மேற்கே தலை, ஆனியும் ஆடியும் ஆவணியும் வடக்கே தலையாய்க் கிடப்ப னென்றவாறு.

தலமிகத் திரியும் தக்கோன்
 தலையை வைத்துக்
கலமிக எடுக்க நன்றாகக்
 கடுகவே நெறிவந் தெய்தும்
வலம்வரு மாதி பாகன்
 மாஞ்சூர னம்பாயா தென்று
புலமிசை அவனுஞ் சொன்னான்
 பூதலத் துளோர்க் கெல்லாம். (126)

என்றது,

வாஸ்துமன் தலையிலே அணியம் வைத்து மரக்கலம் எடுக்கக் கடுகவே நெறி வருமென்றவாறு.

வாத்துமன் திசையை மாற
 வங்கம் எடுப்பச்
சேத்தவப் பொருளுங் குன்றிப்
 பாழாய்
ஆர்த்தவப் பெண்டிர் அழிவும்
 வந்து
மூர்க்கராய் முகூர்த்தமிட முனியையுங்
 கொல்லுங் கண்டீர் (127)

என்றது,

வஷ்னுமன் திசைமாறி ஏரா ஓடினால் இப்படி வருமென்றவாறு.

### ஏராக் கணு முறிக்க

ஒன்றிரண்டு மூன்றழகே ஆறைந்து பொல்லாது
 ஒன்பதுட னேழ்கோரு நான்கோ டிருநான்குந் தட்டுண்ணும்
மண்டிலங்கு மாறைந்து
 மானம்வைத்ததோர் அணியத்தை முதலாக வைத்துக்
கொன்றயந்தார் முடியண்ணல் மிகநலத்தைக் கொடுப்பன்
 கொம்பனையீர் இதுவகையாய்க் கொள்ளுக
பன்றியாய் யிடந்தவனும் மிகநலத்தைக் கொடுப்பன்
 கூறிட்டுப் பலன்கள் பாரே! (128)

என்றது,

ஏராக் கணுப்பார்க்கும் வகை: ஏராவை யளந்துபத்தாக மடித்து, அணியமுதலாக. 1-2-3 உத்தமம். 6-5 பதங்கண்ணடை வந்தால் ஆகாது. 9-7 உத்தமம். 4-8 பங்கு வந்தால் தட்டுண்ணும். 6-10 உத்தமம். இப்படிப் பத்துமட்டும் அணிய முதலாக வைத்து, நன்மை தீமை சொல்வது.

---

*126. நெறி - வழி.*

*127. வாத்துமன் - வாஸ்த்து, சீர்கள் குறைய வந்துள.. இப்பாடல் "கப்பல் சாத்திரம்" 19 ஆம் பாடலொடு ஒப்பிடத்தக்கது.*

*128. சீர்கள் குறைவுபட்டுள ஓலையில்.*

## வங்க தினமறியும் வகை

ஏராவின் நீளம் எனதாகு மென்று
இருமோர் முழங்கள் விரலால்
சோராமல் மூவெட்டி னாலே
பெருக்குத் தொகையான விவைதான்
சீராக இருப்பத்தேழ் தன்னினொடு
சிதைவித்த சேடம் தன்னை
ஆராயும் அசுபதி முதலாக எண்ணி
அறிநீ சொல்வங்க தினமே! (129)

என்றது

பொருந்துமுழம் ஏராவை முழக்கோலால் அளந்து, மிஞ்சினதை தச்சு விரலாலளந்து கொண்டு, 8ல் பெருக்கிக் கழிக்க நின்ற சேடம் எத்தனை யென்று கண்டு, அசுபதி தொட்டெண்ணிக் கண்டு நாளறியவும்.

உன்வங்க நாளும் உடையான் நாளும்
உடனொன்ற வொன்ற
பரவின்கண் ணெண்ணி வருகின்ற நாளும்
யுகமொன்ற வொன்ற
விரிகின்ற சடைமுடி வொன்ற
வங்கமுக வொன்ற வொன்ற
திரிகின்ற வங்கந் திசையெங்கு மோடித்
திருவொன்ற வருமே! (130)

என்றது,

ஏராவின் நாளும் உடையவன் நாளும் ஒன்றாகில் மிகவு முத்தமம். அல்லது, அவனுக்குப் பொருந்திய நாளாய் வந்தாலும் மிகவும் நன்றென்றவாறு.

எண்ணியநாள் இருபத்தெட்டில்தற்
பின்னணிய கூம்பி நடுசூலந் தன்னில்
கலங்கள்தான் எடுக்கத் தேடி நாவாய்
முன்னுதிரை கடலிற் றாழுமாஞ் சென்று. (131)

என்றது,

ஏராவுக்கு நாளிட்ட நாள் அம்பாய்ச் சூலத்தில் நிற்கிலும் போகு நாளாகிலும், யாத்திரைக்குப் புறப்படு நாட்களும் பாய்மரச் சூலமாகிலும் மூன்று நாளையிலே தாழு மென்றவாறு.

---

*129. கப்பல் சாத்திரம் எனும் நூலில், உள்ள உரை ஈண்டு ஒப்பிடத்தகும். "ஏராவினீளத்தை யளந்து, ஒரு முழத்துக்கு யிருபத்து நாலு அங்குலமாகப் பெருக்கிக் கண்ட துகையை இருபத்தேழில் கழித்து நின்ற சேஷத்தை இத்தனையென்று, அசுபதி தொட்டெண்ணிக் கண்டநாள் வங்கநாளென்றறியவும்."*

வதன்றனை நீளம் பார்த்து
மடித்துச் சமனது தன்மையாய்
அதனை யங்குல மளந்து
அசுபதி நாள்முத லாக
தலைகால் அத்த நாளும்
இராக் கதிர்த்த நாளும்
முதல்வன் பகையா நாளும்
மூண்டவித் தலமா காதே. (132)

என்றது,

ஏராவை யளந்து சமனாக மடித்து, அதனை அங்குலத்தினா லளந்து, அசுபதி முதலாக எண்ணிக் கொள்ளுகிற நாள் தலையற்ற நாள், காலற்ற இமை யற்ற நாளாகிலும் உடையவன் பகைநாளாகிலும் முதலு மிழந்து ஓடிப்போவா னென்றவாறு.

ஆதித்தன் சென்ற டைந்த
அத்தம் ராசி தன்னில்
சாதித்த நற்க லங்கள்
சாவாகும்
போதித்த பாயொடு கூம்பும்
பலசரக்கு மேத்துவரே
...... ....... ...............
மாய தேவ வங்கமது. (133)

என்றது,

ஆதித்தன் நின்ற ராசிக்கு ஏழாம் ராசியிலே ஏரா ஓடினால் ஆகாது. பாய்மரம் பலசரக்கு ஏத்த நன்றென்பது.

அருக்கனை யாதல் ஏக
அழகிய மதியை யாதல்
நெருக்கிய அரவு தின்றில்
நிறைமுத லோரை நாளும்
தருக்கிய பின்முன் மூன்றுந்
தடங்கடல் ஓட வங்கம்
எடுக்கினும் வாரி தாழ
இசைப்பினு மிடருண் டாமே! (134)

என்றது,

சந்திரர் சூரியரைக் கிரகணந் தின்றில், முன் மூன்று பின் மூன்று நாளும் ஓடவும் வாரி தாழவும் இசைப்பினும் இடருண்டா மென்றவாறு.

---

*133. நான்காம் அடி ஓலையில் இல்லை.*

ஏரா ஒழுக ஏழில் வாரி தாழ
இருபா லணைப்பப் பச்சூன்
பாராத கொடுதிபணி எண்ணை பூசப்
பரிவா யிறக்கியது
சேராத நாளு மறவே கழித்து
நிறைவான நாளும் தெரிந்தார். (135)

என்றது,

ஏரா ஓடவும், வாரி தாழவும், பச்சூன் இசைக்கவும், பலகை பிடிக்கவும், கொடுதி யடிக்கவும், நீர் வார்த்துக் கழுவவும் பூசவும், இறக்கவும், ஏத்தவும், பாய்மரம் எடுக்கவும், பாயேத்தவும் சேராத நாள் கழித்து ஊட்டினா ரென்றவாறு.

## ஹோரை அறிய

உத்தமநாள் தெரிந்துரைக்கில் முன்னோர் சொன்ன
ரோகிணியும் பூசமுடன் ஓணம் செக்கு
வைத்தமுரசு ரேவதியும் வகுத்துப் பின்னை
மத்திமநாள் அவிட்டமொரு புனர்தமானம்
உத்திரமே சோதி பனையாடி தன்னொடு
அதமநா ளுரைக்கில் யோக மோரை
வைத்தவிடு கண்ணுயிர்கள் போல வுண்டாம்
வாழ்குணமிது வென்று வகுத்தி டாயே. (136)

என்றது,

உத்தமநாள்-ரோகிணியும் பூசமும் திருவோணஞ் சதையம், மத்திமநாள்-அவிட்டம் புனர்பூசம் உத்திரட்டாதி உத்திராடம் உத்திரம்; அதமநாள் இந்நாளும் தெரிந்து கண்பிரான் உள்ள நாளிலே கொள்ளுவது.

தக்கதொரு ஏராவில் பக்க நடுவிடச் சுழிகள்
பல்பொருளும் பூதமாம்
மிக்க மரச்சுழிகள் மீகாமற் காகா
வீறு தடுவுட்சுழிகள் வேந்துக்கள் சாவாகும்
தக்கதொரு சுழிகள் அண்ணியம் நோக்கிடில்
.............. ........... ..............
மிக்கதொரு செல்வ மிகவழிக்குங் காணே. (137)

என்றது,

ஏரா மையத்தில் உள்ளே நடுவேயாடுதல், இரண்டு பக்கங்களிலே யாகுதல், பல்பொருளும் சேதமாம். மிக்க மரச்சுழி பாய்மரம் பார்த்து மீகாமற் காகாது. நடுவுட்சுழி வேந்துவுக்கு ஆகாது. எந்தச் சுழியும் அணியம் பார்க்கில் செலவு மழிக்கு மென்றவாறு.

---

*135. ஓரடியும், சில சீர்களும் ஓலையில் இல.*

ஆதியருளுஞ் சுழிகள் பாமரத்தை நோக்கில்
ஆசாரி சாவான்
தீது பூரச் சுழிகள்
நிலத்தோடே மோதிவிக்கும்
பாதி நடுவிட சுழிகள்
பாரி லுறவோடும்
ஓதி யுரைத்தபடி சொல்லிது வாமே! (138)

என்றது,

எந்தச் சுழியும் பாய்மரத்தை நோக்கில் ஆசாரி சாவான். ஏராவுறப் பிற்கண்ணடை நிலத்தோட மோதிவிக்கும். ஏரா நடு மையத்துள்ளே யாகில் பாரி லுற உடைந்து போமென்றவாறு.

ஏராவும் பலகை மூன்றும்
எழுதரிய வரிநான்கும்
சீராகும் பலகை யெல்லாம்
சிறப்புடன் வைத்த பின்னை
ஆராயில் கூம்பின் சூலம்
அணியத் தோட மாகில்
பாதாள நாளென்று சூலத் தோடு
பாகானது மாகா. (139)

என்றது,

சூலநாள் ஒன்பதும் பாதாள நாளென்றும் சொல்லப்பட்ட சற்றும் ஆகாதென்றவாறு; மற்றநாள் ஆகுமென்றவாறு.

கொள்ளுநாள் ராசி தன்னில்
கூறிய கோள்கள் நிற்கில்
வள்ளலாங் கருமங் கேடாம்
மரக்கலம் மரிக்கை மெய்யே
வெள்ளமாம் வியாழம் வெள்ளி
ஏரா விடுவ தற்கும்
கள்ளவிழ் குழலின் மாதே
கணக்கிலும் நிறுத்திப் பாரே. (140)

என்றது,

முகூர்த்தம் செய்கிற இராசியிலே சூரியன் செவ்வாய் சனி நிற்கிலும், ராகு கேது நிற்கிலும், அமர பக்ஷத்தில் சந்திரன் நிற்கிலும் ஏரா நில்லாமல் போம். முகூர்த்தங் கொள்ளு ராசியிலே வியாழனாகிலும் வெள்ளியாகிலும் நினைத்த துறைக்கெல்லாம் ஓடிப்போய் வருமென்பது.

---

*137. பலசீர்கள குறைவுபட ஓலையில உளது பாடல்.*
*வேந்து - அரசன்*
*138. சீர்கள் குறைந்துள*
*பாரில் - பாறையில், பாரிலுற - பாறையில மோத*
*140. மரிக்கை - உடைதல்*

புதனும் .............. இதனுடன் நிற்கு மென்றார்
.............. சனி செவ்வாய் ஆகிற
முதலுடன் ......... மென்று சொன்னார்
அதனுடன் அருகானவர் மடிந்திடும்
மீகா மென்றார். (141)

என்றது,

........ருக்கில் காற்றிலே அகப்பட்டுத் தப்பி வரும்; செவ்வாய் சனியும் நின்றால் முறிஞ்சுபோம்; லெக்கினத்தில் சூரியன் நின்றால் படிந்து போம். இது அந்தந்தக் கிரகங்களும் கூடினால் இந்தப்படி அறியவும்.

வெள்ளி.................. வேண்டார்
எள்ளிய திங்க ளாகில்
ஓர்ந்துபின் கூறு மென்சு
.......... மரம்பல முறியு மென்றார்.
தெள்ளிய சனியும் சேயும்
திருந்தநற் கிரும.................. (142)

என்றது,

சுக்கிர ஓரையாகில் வெகு நாளைக்கு வோடித்திரியும் சந்திரனுட ஓரையாகில் ஓடித்திரிஞ்சு விலைப்பட்டுப் போம். புதனுட ஓரையாகில் (பாய்மர முறியும்). செவ்வா ஓரையும் சூரியன் ஓரையும் பொல்லார்க ளென்றவாறு.

" ............ யன்றிப் ............ "
பொருந்திய வியாழம் நன்று
எல்லாரும் சொன்னா றென்று
............ ............ ............
............ ............ ............
நாகத்தைக் கழித்துப் போந்தங்(கு)
அல்லாத கோள்க ளெல்லாம்
அகற்றுக என்று ரைத்தார். (143)

என்றது,

வியாழனும் ஓரை மெத்த நல்லது, ராகு கேது இருந்தால், ராசியும் ஓரையும் அந்த ஓரை வந்த நாழிகையில் ராகு காலம் கேது காலம் யிருந்தாலும் ஆகாதென்றவாறு.

---

*141. பாடல் அடிகள் முழுவதுமாக ஓலையில் இல. ஓலையில் வலப்புறம் முறிந்துள்ளதால் சில சொற்களை அறிய இயலவில்லை.*
*142. ஓலை முறிவால் பாடலின் வடிவம் கிடைக்கவில்லை.*
*143. புள்ளியிடப்பட்ட இடங்களில் ஓலையில் சீர்கள் இல.*

உரைத்த பனிரெண்டு பார்க்கில்
உகந்தநாள் ஆற தாகும்
உரைத்தநாள் பின்ன கத்து
நின்றநாளு நல்ல தென்றார்.
வரைத்தநா ளாறு நன்று
வருத்தமே முன்ன தாறும்
உரைத்தனர் பொருத்து நாட்கள்
போந்திடா மற்ற தெல்லாம். (144)

என்றது

சொல்லப்பட்ட உள்நாளில், பனிரெண்டில் முன்னாறு நாளும் நல்லது, பின்னாறு நாளும் உத்தமம். மத்தியமாயிருக்கும் நாளாறும் பொருந்திடா தென்பது.

எல்லையில் ராசி தன்னில்
இசைந்த .......னோடே
சொல்லிய பரிசை யீந்து
சோர்வல்லா வண்ண மின்னி
நல்லகோள் விஞ்சை கொன்று
நாட்கோள் முகூர்த்த மெல்லாம்
தொல்லைநாள் மதிய மோடு
தொடர்ச்சிமே லுணர்க லுற்றேன். (145)

என்றது,

முகூர்த்த ராசிக்குடையவன் எசமானிடத்தில் கடகத்தில் இருக்காமல் நல்ல கோளில் கூடி நின்றால் சந்திர லெக்கினத்திலாவது ரெண்டாமிடத்திலாவது, நாலாமிடம் ஏழாமிடம் பத்தாமிடம் இப்படி எண்ணங்களில் இருக்கப் பார்த்து முகூர்த்தம் பண்ணுவர்.

உத்தமநாள் மதியம் தோய்ந்து
உறுதிய வருளைக் கொண்டு
மத்திம கூம்பு தன்னில்
மத்தாலும் பிணித்த பின்னை
பெற்றதை அணியம் வைத்தால்
பேசியே வகுத்துக் கிழமை
மற்றநாள் வலம தாக
வந்தவா றொன்று மென்றார். (146)

என்றது,

சந்திரனிருந்த ராசி முதல் நடுச்சூல் உள்ள நாளில் வைத்து, அணியத்தால் கிழனோக்கி வலமாக எண்ணிவந்தால், நடுவரையில் மெத்தவும் நல்லது; பக்க வரையில் வரில் தண்ணீர் காணு மென்பது.

கொண்டநல் வாழை தெங்கு
குலையுடன் கமுகு பாளை
மண்டல விழுங்கு மல்லி
வடியணி யாரத் தோடு
யெண்டிசை யெங்கு நாட்டி
யெடுடோலி மேளத் தோடு
பெண்டிரும் பிள்ளை யோடும்
பிணக்கற யிருத்திக் கொள்வார். (147)

கண்ட யிருநி லத்தில்
கன்னி சிலைமீ னுடனே
தண்டா யிவைநான்கில்
தான்கலங்கள் தொடுப்பீ ராகில்
உண்டான நிதியி ழுந்து
உயிரி ழுந்து கப்பல்
நின்றான ஆளி ழுந்துதான்
திரும்ப யிவைவா ராதே. (148)

என்றது,

கன்னி தனுசு மீனம் மிதுனம் இந்த நாலு லெக்கினத்திலும் ஏரா ஒடி முகூர்த்தம் பண்ணினால் உடைமையும் இழந்து, உயிருமிழந்து, உருவு மிழந்துபோம்; திரும்பி வாராதென்றவாறு.

நண்டு துலாம் மகரம்வரில் தேடிமானே
கொண்டெதிரே வரும் சாடி
கன்னி விடையிவை கும்பம்.....
.... நான்கிலும் நாடுங் கலங்களே (149)

என்றது,

மேட மகரம் துலாம் மகரம் இந்த நாலு இராசியிலும் ஏரா ஓடினாலும் பயணம் புறப்பட்டாலும் வெகு திரவியத்தைத் தேடிக்கொண்டுவரும். கும்பம், கன்னி, சிங்கம், ரிஷபம் இதில் ஏரா ஓடினாலும் பயணம் புறப்பட்டாலும் உத்தமமாகும்.

---

*147. இப்பாடலுக்கு ஓலையில் உரை காணப்படவில்லை.*

வாய்த்தசிலை மீனம் மிதுனமொடு கன்னி
ஏத்தும் முகூர்த்தம் இவைகளது வாகா
கோத்த சிங்கம்தேள் சலாமறி யென்று
கோத்தமு கலங்கள்செய் சுறவு மிவையாமே. (150)

என்றது,

தனசு, மீனம், மிதுனம், கன்னி யிந்த நாலு முகூர்த்தத்திலும் ஏரா ஓட முகூர்த்தம் பண்ணவும் கப்பல், படகுப் பயணம் புறப்படவும் விருச்சிகம், சிங்கம் துலாம் மகரம் ரிஷபம் இவை முகூர்த்தங்கள் மெத்த நல்லது.

கலங்கள்முன் வைத்தார்கள் காணஉருக் கேளாய்
கருதிய கிரணந்தான் கருத்துங் கூறல்
இலங்கியதோர் வெள்ளி மதியினில் நிற்பதோ
(கணங்களில் ராசி இலையென் றாகில்)
மலங்கியதோர் மாற்றார்கள் வந்துற் றாலும்
மாரியுடன் புயல்வாய் வந்துற் றாலும்
நலங்குவார் விழியினாளே நல்வாழ்ந்து
நன்றாகத் தனங்கள்மிக நல்குங் காணே. (151)

என்றது,

மரக்கலங்கள் வைக்க முகூர்த்தம் வைத்த இராசிகளில் வியாழன் இருந்தாலும், சுக்கிரனும் சந்திரனும் கூடியிருந்தாலும் யிவர்களுக்கு நிச ராசிகளில்லாமல் யிருந்தால் இதுவே ஏரா ஓடினாலும் பயணம் புறப்பட்டாலும் மாற்றான்கள் தேசத்தைப் பிடிக்க வந்தாலும் அகப்படாது, காற்றும் மழையும் புயலும் வந்தாலுந் சேதம் வராது. வெகு நாளைக்கு ஓடித்திரிந்து வெகு திரவியங்கள் தேடிக்கொடுக்கு மென்றவாறு.

தக்கதோர் வெள்ளி தானும்
சமனத்து உதித்து நின்றால்
மிக்கநற் கண்ட மாகும்
ஓடுகைக் குற்ற மன்றி
அக்கடல் தன்னி லோடி
அரும்பொருள் மிகவும் கொண்டு
புக்கிடந் தன்னில் நில்லார்
பொருந்திடும் வங்கந் தானே. (152)

என்றது,

சுக்கிர லெக்கினத்திலும் நாலா மிடத்திலும் ஏழாமிடத்திலும் பத்தாமிடத்திலும் உச்சித் தானத்திலும் ஆட்சித்தானத்திலும் நிற்க, சுக்கிர ஒரை முகூர்த்தத்திலும் ஏரா ஓடினாலும் பயணம் புறப்பட்டாலும் போனவிடங்களிலே வெகு திரவியங்களைத் தேடிக் கொண்டு தன்னிஷ்டப்படி ஓடிவரும். இப்படி வெகு நாளைக்கு ஓடித்திரியும் என்றவாறு.

---

*150. சுறவு - மகரம, மாற்றார் - பகைவர்*

மந்தி உதயந் தன்னில்
 மணஞ்செய்யில் மகவுண் டெங்க
சுந்தரக் கருமஞ் செய்யில்
 தொடுகட லோடஞ் செய்தல்
சந்திரன் துவாதசத்தே மன்னில்
 ............ ............
அந்தரமாம் தப்பா தென்றே
 வகுத்தவர் அருளி னாரே. (153)

என்றது,

வியாழ பகவான் லெக்கினத்தில் நிற்க, ஏழாமிடமாகிலும் இருக்க, கலியாணம் பண்ணினால், புத்திர சந்தானமும் வாழ்வும் செல்வமும் உண்டாம். ஏதொரு சுபகாரியங்களும் செய்யலாம். கடலோடவும் செய்யலாம். சந்திரன் பன்னிரண்டாமிடத்திலே இருக்க, வியாழன் ஆறாமிடத்திலே இருக்க, ஒரு காரியமும் செய்யலாகாது; செய்தால் அந்தரமாய் அழிஞ்சுபோ மென்றவாறு.

பக்கம் கிருட்டி நவமி
 மாதம் சேர்ந்த நாளும்
தக்கதோர் வீட்டில் தூமகேதுந்
 தானிவை ஒன்று மாகா
மிக்கதீக் கோள்கள் வார
 முதயமும் வரவே யாகில்
புக்குமே கலங்கள் தேயப்
 பொருகடல் தன்னி லுள்ளே. (154)

என்றது,

அட்டமி நவமி மாதாந்தஞ் சேர்ந்த தியாச்சியம், வீட்டில் தூமகேது ஞாயிறு செவ்வாய் சனி அமாவாசி பாட்டிமம் இதுகளிலே ஏரா ஓடினாலும் பயணம் போனாலும் கடலிலே சேதமாய்ப் போமென்றவாறு.

## வெண்பா

ஓரையே சுக்கிரனும் ஒரெட்டில் ஈசுரனும்
சாரொக்க மூன்றிடத்தில் சந்திரனும்-நேரொக்க
நிற்கில் நெடுநிதி யங்கொண்டு வெற்றியுடன்
மீளுமே ஏரா பூ. (155)

என்றது,

லெக்கினத்திலே சுக்கிரன் இருக்கில், சுக்கிர ஓரையிலும் சனி யெட்டாமிடத்திலிருக்கச் சந்திரன் மூன்றாமிடத்திலிருக்க ஏரா ஓடினாலும் பயணம் புறப்பட்டாலும் வெகு திரவியங்களைத் தேடிக் கொண்டு, சிக்காது வந்து சேரு மென்றவாறு.

*154. பக்கம் கிருட்டி - கிருட்டிண பக்கம். பக்கம் என்ற தமிழ்ச்சொல்லே பக்ஷம் என்று கூறப்படுகிறது.*

உதயத்தி னாலிலே பத்தா மிடத்திலே
வியாழ நிற்க
யெழுகிரகத் தானமிகப் பொல்லாக்
குணம் நின்றால்
கூடிய கதிரலை மதயானை கெட்டு
மயங்கி விழுந்து
பேசரிய கொடிஎன யெழுந்து
கும்பிட்டு நிற்பன்களே. (156)

என்றது,

லெக்கினத்திற்கு நாலா மிடத்திலே, ஏழா மிடத்திலே, லெக்கினத்திலே வியாழன் நின்னாலும் கிரகமும் பொல்லாத் தானங்களிலே நின்னால் சந்திரன் பனிரெண்டாமிடத்திலே நின்னால் உருவும் உடைமையும் இழந்து மனிதர் மாத்திரம் தப்பி வருவார் களென்றவாறு.

## கிரக நிலை அறியும்படி

நவையார் குழவி பிறந்தது
வருநன்மை தீமை நாடுங்கால்
ஆவது கருப்ப தானம்
முதலாக ஆய்ந்து கொள்க
இதையறியாப் போழ்ந்து தான்பூமி
நோக்கும் பொழுது கொள்க
உதையம் உயிர்தவறி மதிஔரை
உடல் கூந்தல் மாமயிலே! (157)

என்றது,

பூமியில் பிறந்தவருக்கெல்லாம் நன்மை தீமை விசாரிக்கு மிடத்துக் கெர்ப்பதான முகூர்த்தமாகக் கொள்ளுவான்; கொள்ள முடியாதாகிற், பூமியில் நோக்கும் பொழுதாகிலும் கொள்ளுவான். பிறந்த பொழுது நவக்கிரகம் உயிரென்றும், சென்ம லெக்னமென்றறிவது. சந்திரன் நின்ற ராசியை உடலென்றும் சந்திர லெக்கின மென்றுமறிக.

மாமன் சிறுவன் தாய் தந்தை
மானவந்தும் ஈரைந்தும்
பூமன் காரிமதி வெய்யோன் நிற்க
புகழ்க்கோள் நோக்கில்வேற்
சோமற் கேழிற் சனிநிற்கில் தாய்சாம்
சுடர்க்கோள் பிதா மரணம்
தீமைக் கோள்களாம் இவைபற்றி
நிற்கில் சிறுவன் சாம். (158)

---

*156. இதன்பின் சில ஏடுகள் இல. எனவே மூல நூலின் சில பாக்கள் நமக்குக் கிடைக்கவில்லை.*

என்றது,

உதயராசிக்கு மஞ்சாமிடமும் பத்தாமிடமும் செவ்வாய் நிற்கில் மரமாமன் மரணமென்பது, சனி நிற்கில் பிள்ளை மரணம். சந்திரன் நிற்கில் மாதா மரணம். ஆதித்தன் நிற்கில் பிதா மரணம். சந்திரனுக்கு ஏழாமிடத்தில்லே சனி நிற்கில் மாதா மரணமென்பது. ஆதித்தனுக்கு ஏழாமிடத்திலே செவ்வாய் நிற்கில் பிதா மரணம். சென்ம லெக்கினத்தையும் சந்திர லெக்கினத்தையும் பாவக்கிரகங்கள் பற்றி நிற்கில் பிள்ளை மரணமென்பது.

சாரும் உதயம்தனக் காறிற்
கதிராயதற் கேழில் சனிசெவ்வாய்
சேரில் மகவும் பிதாவுடன்சாம்
திங்கள் தன்னில் தாயுடன்சாம்
சாரி யுதிப்ப சேய்நான்கிற்
கதிரோன் ஏழிற் கலந்திடினும்
பாரில் மிகவும் பகற்கிடவார்
பாம்பி னுதைய மிராக்கிடவார். (159)

என்றது,

உதயராசிக்கு ஆறாமிடத்தில் ஆதித்தன் நிற்கில் ஆதித்தனுக்கு ஏழாம் இராசியில் சனியாதல் செவ்வாயாதல் நிற்க பிதாவும் பிள்ளையும் மரணம் என்பது. சந்திர லெக்கினத்துக்கு ஆறாம் ராசியிற் சனி செவ்வாய் நிற்கில் மாதாவும் பிள்ளையும் மரணம். சென்மத்தில் சனியும் நாலாமிடத்தில் செவ்வாயும் ஏழாமிடத்திலே ஆதித்தனும் நிற்க பிள்ளை யந்நேரமே மரணம். சென்ம லெக்கினத்தில் ராகு நிற்க, பிறந்த பிள்ளை இராக் கிடவாதென்பது.

கிடைத்த உயிரோடு உடல்வரு
நட்புக்கோள் நிற்க கெழுமியகோள்
படைத்த நோக்க முண்டெனினும்
பாலன் மரணம் தேயுமதிக்
கடுத்த விருபக்கக் கோளேல்
அன்னை புதல்வனுடன் மரியும்
தொடுத்த கூடலர்தீண்டல்
செய்யில் மகவும் சொன்னோமே. (160)

என்றது,

சென்ம லெக்கினமும் சந்திர லெக்கினமும் தீக்கோள் நிற்கக் கர்ப்பதானஞ் செனித்த நாளும், தீதற்ற செனித்த பிள்ளைக்கு சுபக்கிரகங்கள் நோக்குண்டாயினும் செனித்த பிள்ளையும் மரணமென்பது. அமரபக்கத்துச் சந்திரனுக்கு இரண்டு பக்கமும் தீக்கோள் நிற்கில் மாதாவும் பிள்ளையும் மரணமென்பது. சந்திர லெக்கினத்தில் ராகு நிற்கினும் செவ்வாய் நிற்கிலும் சுபக்கிரகங்கள் நோக்கு நின்றாலும் பிள்ளை மரணம். சந்திர லெக்கினத்தில் கிரகணம் தீண்டினும் விழுங்கினும் பிள்ளை மரணம் என்பது.

---

*158. சோமன் - திங்கள்*

*160. இதற்கடுத்த பாடலும் உரையும் முன் 159 ஆம் பாடலும உரையுமே ஆகும். மீள வந்துள.*

சொன்ன பூசம் சித்திரை
பூராட நாளில் மகத்தோன்ற
பின்னு நாற்கா லினும்பிறக்க
பிதாப்பிள்ளை மாமன் சாம்
பன்னொன் றொன்பான் சேய்சனியும்
பாம்(பு) ஒன்பதினும் பிதாமரணம்
பொன்னோக் காதே யெட்டேழிற்
புதல்வன் பொன்றும் சனிசெவ்வாய். (161)

என்றது,

பூசம் சித்திரை பூராடம் யிந்நாளிலே முதற்காலிலே செனிக்கிற் பிதாமரணம் என்பது; இரண்டாங் காலில் மாதா மரணமென்பது. மூன்றாங் காலில் பிள்ளைமரணம் நாலாங்காலில் மாமன் மரணமென்பது. பதினொன்றாமிடத்தில் ஒன்பதாம் இடத்தில் சனி செவ்வாய் நிற்பினும், ஒன்பதாம் இடத்தே பாம்பு நிற்பினும் பிதா மரணமென்பது. அட்டமத்ததாதல் ஏழாமிடத்தாதல் சனி செவ்வாய் நிற்பினும் பிள்ளை மரணமென்பது. இவை யெல்லாம் சுபக்கிரகங்கள் நோக்கில்லையாகில் என்று சொல்லுவது.

செவ்வாய் முன்றிலுடன் பிறந்தேழிற்
சனிசெவ் வெள்ளி பிள்ளை
தவ்வா மதிய மேழிற்றாய்
தந்தை மரணம் கதிரேழில்
அவ்வாய் அலவ னுதிப்ப
அதற்காறு மூன்றுந் தீக்கோள்
அமைவார் குழலாய் பன்னிரண்டில்
அற்றகோளில் கிலமிகப் போமே. (162)

என்றது,

சென்மத்துக்கு இரண்டாமிடத்தே செவ்வாய் நிற்க, உடன் பிறந்தார் மரணம்; ஏழாமிடம் சனி செவ்வாய் வெள்ளி நிற்கில் பிள்ளை மரணம்; ஏழாமிடத்தே நிற்கில் மாதா மரணம், ஆதித்தனுக்கு ஏழாமிடத்தில் நில்கில் பிதா மரணம். கர்க்கடகம் உதையமாக ஆறாமிடத்தே மூன்றாமிடத்தே பாவக்கிரகங்கள் நிற்பப் பனிரெண்டாமிடத்தே சுபக்கிரகங்கள் நிற்பப் பிறந்த பிள்ளை மரண மென்பது.

மகவின் உயிருக்கு ஆறேழில்
மற்றை யெட்டின் மூன்றாந்தினம்
மிகவும் தேயு மதியுடனே
வெங்கோள் இருக்கத் தண்கோள்கள்
திகழ்நோக்க முண்ட தெனினும்
தேயும் திக்குநூ லெட்டின்
இகமுந் தீக்கோள் நின்றிடினும்
எச்ச மான நிச்சயமே. (163)

---

*161. "கால்" என உரையில் வருவதைச் சோதிடர் "பாதம்" என்பர். அட்டமம் - எட்டாமிடம்.*

என்றது,

உதயத்திற் காறாமிடத்தே யாதல், ஏழாமிடத்தே யாதல், எட்டாமிடத்தே யாதல், பனிரெண்டாமிடத்தே யாதல், தேய்பிறையுடனே பாவக்கிரகங்கள் நிற்ப, சுபக் கிரகங்கள் நோக்கா தொழியினும், தேய் பிறைக்கு நாலாமிடத்தே யாதல் எட்டாமிடத்தே யாதல் பாவக் கிரகங்கள் நிற்பினும் பிள்ளை மரணமென்றறிவது.

நிச்சயமே கதிருதையம் பாடு
தன்னில் நிலவு திப்ப
அச்சக்திக் கோட்பன் னிரண்டில்
வருமரணம் மகற்கெனப்
பச்சை மதியும் கதிரவனும்
பால னுயுர்க்குப் பனிரெண்டில்
கச்சு முலையாய் நிற்பதோர்
கண்போ மொன்றே வொருகண்போம். (164)

என்றது,

ஆதித்தனும் சந்திரனும் கூட உதயம் பண்ண, அதற்குப் பன்னிரண்டாமிடத்தைப் பாவக் கிரகங்கள் நிற்பினும் ஆதித்தன் அத்தமிக்க, சந்திரனும் உதயமாக, பன்னிரண்டா மிடத்தே பாவக்கிரகங்கள் நிற்ப, சுபக்கிரகங்கள் நோக்கா தொழியிற் பிள்ளை மணைமென்பது. உதயத்துக்குப் பன்னிரண்டாமிடத்தே சந்திரனும் ஆதித்தனும் நிற்க, பிள்ளை யிரண்டு திருட்டியும் கெடுமென்பது. ஒருவர் நிற்கில் ஒரு திருட்டி கெடுமென்பது. பன்னிரண்டாமிடத்தே நிற்கிறவர்கள் சனியாதல் செவ்வாயாதல் நோக்கிற் கண் கெடுமென்பது.

போது மிராசி யிரண்டினையும்
பொன்னே கண்டித்துக் கொள்க
சீத மதிய முடனிற்கிற்
சிறுவன் குருபுத்ர னல்ல
சாதி கதிரேல் மறையவர்
சனியே லமணர் கீழ்ப்பட்டார்
ஆதி வணிகன் ...............
செவ்வாயேல் புலைய னவன்றந்தை. (165)

என்றது,

சந்திர லெக்கினத்தையும், சென்ம லெக்கினத்தையும் சுபக் கிரகங்கள் நோக்காமல் சந்திரனுடனே ஆதித்தன் நிற்கிற் பிராமணராதல் சத்திரியராதல் என்றறிவது. சனியாகில் சமணராதல் நாலு சாதிக்கும் கீழ்ப்பட்டவ ரென்றறிவது. செவ்வாய் நிற்கில் செட்டியாராதல் ......... என்றறிவது. பாம்பு நிற்கிற் புலையரென்று சொல்லுவது.

---

*164. திருட்டி - கண் பார்வை*

தாழ்ந்த உடலைச் சனிநோக்கிற்
கரிமதி சேய்தா னிற்ப
பயந்த குழவி யிரந்துண்ணும்
மைந்தன் உடலொ டுயிர்தன்னை
முந்த நோக்கிற் கிரகமேடம்
முரண்செய் கால வோரையுடன்
செந்தண் மொழியாய் சனிகண்டஞ்
சேரப் பிறந்தான் சிறைபுகுமே. (166)

என்றது,

சுபக்கிரகங்கள் நோக்கில் யிருந்த சந்திர லெக்கினத்தைச் சனி முழுநோக்கு நோக்க மேடத்திற் சந்திரனும் செவ்வாயும் நிற்கப் பிறந்தான் யிரந்துண்ணும். கால வோரையிற் சந்திரன் லெக்கினத்தையும் சென்ம லெக்கினத்தையும் பாவக்கிரகங்கள் நோக்கிற் றலையறுப் புண்ணும். சேய் வயிற்றின் கண்டங்களில் சனி நிற்கிற் பிறந்தான் சிறை புகுமென்பது.

சிறந்த உதயம் சனியாகில்
பாம்பாய்த் தெரிவை புகர்சேரில்
இறந்த மதிநாட் பிறந்தவன்
கால்கைகள் மந்த முண்ணும்
பிறந்த உயிர்கால் சேயாக
பெரிய கதிரோன் அதிலுதிப்ப
பிறந்த மதிபாம் பொருகாலிற்
கூடிற் குழவி யுடலழிவாம். (167)

என்றது,

சனி யுதயமாவதற் கேழாமிடத்தே பாம்பு நிற்கக் கன்னியிலே வெள்ளி நிற்க, அமரபக்கத்துச் சென்றழி கின்ற சந்திரன் நின்ற சென்ம காலத்து பிறந்தான் கையும் காலும் மந்தகதி யுண்ணும். சென்ம லெக்கினத்திற் காலிலே செவ்வாய் நிற்கப் பிணங்கி, சற்றே ஆதித்தன் நிற்க அதிலே உதயமாக தேய்ந்திருக்கின்ற சந்திரனும் பாம்பும் ஒரு காலிலேயுறி லப்பொழுது பிறந்தானுடல் பிளப்புண்ணும் என்றவாறு.

உடற்களத்திர பாம்பிற் காரி
உதிப்பப் பிறந்தான் உடல்பிளவாம்
அடற்கண் ணரவு நோக்குப்பெற்
றறிந்த மதியே தலையறுமென
மடுத்த மதிதேள் சேயதிற்
சனிவந் துதிப்பத் தன்முன்றிற்
கொடுத்த நான்கில் வரப்பிறந்தான்
குறளாங் கொவ்வைச் செவ்வாயே. (168)

---

*167. தெரிவை - கன்னி இராசி*
*புகர் - சுக்கிரன்*

என்றது,

அமர பக்கத்து அமாவாசையின் கடகசந்திர லெக்கினத்து நின்ற சந்திரனுடனே ஆதித்தன் நிற்ப, அவர்களுடனே பாம்பு நிற்ப, சனி யுதையமாகப் பிறந்தான் ஆயதத்தாலே யுடல் பிளப்புண்ணும். ராகு கேதுகள் நோக்கப் பெற்ற தேய்ந்த சந்திரன் சுடர் நிலவாகப் பிறந்தான், தலையறுப்புண்ணும். மேடத்திலாதல் விருச்சிகத்திலாதல் செவ்வாய் நிற்க சனி உதயமாக உதயத்துக்கு மூன்றாமிடமாதல் நாலாமிடத்தாதல் புதனிற்கில் பிறந்தான் குறளுருவா யென்றவாறு.

வாய்ந்த கோள்கள் ஓரேழில்
உறுவர் மறுவற்ற தமதுச்சம்
காய்ந்த மடங்கல் உதித்திடினும்
கனக னுதிப்ப வைந்துகோள்
போந்தும் உச்ச மெய்திடினும்
புகழும் நற்கோ ளுச்சமுற
வாய்ந்த குடத்திற் புகருதிப்ப
வந்தான் ராசாக் கரசாமே. **(169)**

என்றது,

ஆதித்தன் முதலான ஏழு கோள்களினும் ஆறுகோள் தாம்தாம் உச்சத்தினிற்ப, சிங்க முதயமாகப் பிறந்தவன் சத்தியவானுமாய் ராசராசனுமாமென்று; நாலுகோள் தாந்தாம் உச்சத்தினிற்ப, கும்பத்தில் வெள்ளி யுதயமாகப் பிறந்தான் எல்லாவுலகு முடையனா மென்றுஞ் சொல்லு மென்றவாறு.

அரசாம் நண்டில் நிறைந்து
மதிதன்னை ஆறுகோள் நோக்க
உரைசால் குண்டை யுதித்திடினும்
ஒருகோ ளுச்சமுற வொழிந்தோர்
கரைசே ராட்சி நட்பெனினும்
கன்னி புதனாய் கயல்புகராய்
விரைசேர் குழலாய் தண்மதியோன்
மேவி யிடினும் வேந்தராமே. (170)

என்றது,

கர்க்கடகத்துப் பூரணச் சந்திரனை ஆறுகோள் நோக்க, இடபம் உதயமாகப் பிறந்தான் அநேகநாள் ராச்சியம் பண்ணுமென்பது; சுபக்கோளி லொருகோ ளுச்சத்தில் நிற்க, மற்றைக்கோள்கள் தாந்தாம் நட்பினுமாட்சியினும் நிற்பப் பிறந்தான். இரசாக்கள் வணங்க வாழு மென்பது. கன்னியில் மிதுனத்து வெள்ளி நிற்பத் தனுவில் வியாழமும் சந்திரனும் நிற்பப் பிறந்தான் பிறராட்சிகளை வென்று ராச்சியம் பண்ணுமென்றவாறு.

---

*169 மடங்கல் - சிம்மராசி, குடம் - கும்பராசி*

*170. வெய்யோன் - சூரியன். மால் - புதன்*

*170. குண்டை - இடபராசி, நண்டு - கடகராசி*

வேந்தன் அலவன் றனிலுதிப்ப
வெய்யோன் மேடம் விடைபுகர்மால்
சேர்ந்து வரினும் விடைமதி யிருப்ப
சிங்கங் கதிராய்ச் சிலைகுருவாய்
ஆய்ந்த வெள்ளி யுதையத்து
ளம்பொன் காலிற் பிறந்திடின்
வாய்ந்த மதிக்கட் டேழெட்டில்
மால்லான் புகர்சொன் னோமே. (171)

என்றது,

கர்க்கடகதில் வியாழம் உதயமாக, ஆதித்தன் மேடத்தில் வெள்ளியும் புதனும் இடயத்தினில் இருப்பப் பிறந்தவன் எல்லா தேசமும் ஆளுமென்பது. சந்திரன் இடபத்தினில் ஆதித்தன் சிப்கைத்தினில், வியாழம் தனுவில் வெள்ளி யுதயமாக வியாழமங்குசத்தில் பிறந்தான் ராசராவரென்பது. சந்திரனுக்காக விடபத்தே புதனும் வியாழமும் எட்டாமிடத்தே வெள்ளியும் நிற்கப் பிறந்தான் சத்துருக்களை செயித்து ராச்சியம் பண்ணவென்றவாறு.

மன்னு மகரம் சனிமறிசேய்
மதியங் கெடவதி லோவள்ளி
பொன்னும் லில்லிற் கதிர்சிங்கம்
புதனும் வினைபொ ருந்திடினும்
நுன்னும் மதியும் உச்சமுறச்
சுடரும் புதனும் முயிர்க்காறில்
மின்னும் புகர்பொன் தம்மிடத்தே
மேவு மேனியின் முழுவாழ்வே. (172)

என்றது,

சனி மாகத்தும் செவ்வாய் பத்தாமிடத்தும் சந்திரனும் கர்க்கடகத்தும் வெள்ளி துலாத்தும் வியாழம் தனுசிலும் ஆதித்தன் சிங்கத்திலும் புதன் மிதுனத்தும் யிருக்கப் பிறந்தானெடுங்கால மிராச்சியம் பண்ணு மென்பது. சந்திர சனியும் தம்தம் உச்சத்தினில் ஆதித்தனும் புதனும் உதயத்துக்கானவிடத்தே நிற்க, வெள்ளியும் வியாழமும் சந்திரமிடத்தே நிற்கப் பிறந்தான் ராசாவாமென்ற வாறு.

வாழும் வெள்ளி மிதுனத்து
மதிபொன் றனுவில் மனம்கண்டே
சூழும் அரிவை புதனுதயந்
தோன்றில் அரசராம் சுடரின்று
தாழில் உச்ச முறவையே
உதிப்பக் குளிர்பொன் சனிக்குடத்தில்
ஆழில் மிதுனம் தேட்செவ்வாய்
எய்த உலகில் லிறையாமே. (173)

---

*172. பொன் - வியாழன் (jupiter). துன்னும் - நெருங்கும் உயிர்த்தல் - உதயமாதல்.*
*173. பொன் - வியாழன்.*

என்றது,

வெள்ளி மிதுனத்து நிற்பிற், சந்திரனும் வியாழம் தனுவினில் செவ்வாய் விருச்சிகத்து நிற்ப, கன்னியில் புதனுதயமாகப் பிறந்தான் உருவதேசத்துக்கும் எசமானென்று, சந்திராதித்த யிருவர் தாந்தாம் உச்சில் உச்சத்தினில் நின்று உதயமாக வியாழம் கர்க்கடத்து நிற்ப, சனி கும்பத்தினில் புதன் மிதுனத்தினில் செவ்வாய் விருச்சிகத்தி னிற்பப் பிறந்தான் ராசராசராம் என்றவாறு,

இருப்பன் சேனைத் தலைவனா
முக்கோ ளுச்சமே மேநிற்ப
தரப்பொன் னரையும் முச்சமைச்சனாம்
அருக்கன் மேடன் தன்குரு
வரையமை வெள்ளி யேழிடத்தே
நோக்கநற் கோளிற் பிறந்தான்
பொறையும் வலியு மிருநிதியும்
புகழும் கொடையும் மிகப்பூணும். (174)

என்றது,

மூன்றுகோள் தந்தம் உச்சத்து நிற்பப் பிறந்தான் சேனா பதியாமென்பது. வியாழமும் வெள்ளியும் தாம் உச்சத்து நிற்ப நற்கோளங்கிசத்திற் பிறந்தான் மந்திரியுமாட்சியுமாவானென்பது. ஆதித்தன் மேடத்தில் நிற்ப, வியாழம் தனுவில் நிற்ப, வளர்கின்ற சந்திரனை வெள்ளி யேழாமிடத்தே நின்று நோக்க நற்கோளங்கிசத்திற் பிறந்தான். பிறையும் புலமும் செல்வமும் கொடையு முடையனாமென்பது.

பூண்ட விடையில் மதிக்கேழில்
பொன்னாய்ப் பிற்கால் பிறந்திடின்
தூண்டு பிற்கால் பொன்னுதிப்ப
சுறாச்சே யடையத் தோன்றி
நாண்ட குருவு நிறைமதியும்
சேர நெடுமால் பேணரசும்
மாண்ட புகரி னுதயத்து
வந்தான் கல்வி நிதியாமே. (175)

என்றது,

சந்திரன் இடபத்தினில் அவனை யேழாமிடத்தே. வியாழமும் நோக்க, வியாழ முதற்காலில் பிறந்தான் வித்துவானுமாய், ராச்சிய சேனாபதியுமாமென்று வியாழ முதயமாக செவ்வாய் மகரத்தில் நிறவெள்ளியங்கி சத்தில் பிறந்தான் கீர்த்தியும் வெற்றியு முண்டாமென்பது. வியாழமும் நிறைந்த சந்திரனும் கூடி நிற்ப, புதனும் கன்னியிலே நிற்ப வெள்ளி யுதயமாகப் பிறந்தான் உலகபதியாய், வித்துவானுமாமென்றவாறு.

---

*174. நரை - வெள்ளி*

நிதியுடைப் புகரும் பொன்டிங்கள்
தனைநோக்க வாழும்நாள் நெடுவாக
மதியினைத் தீக்கோள் நோக்க
மானிடரில் உத்தம னாகும்
கதியுடைப் புகர்ப்பொன் டிங்கள்
தனைநோக்கக் காரி கோலினு
முதயமாய்ப் பிறந்தான் வாழு
மொருவருக்கு மொன்று மீயான்! (176)

என்றது,

வெள்ளி மீனத்து நிற்பு, வியாழம் உதயமாகப் பூரண சந்திரனைத் தீக்கோள் நோக்கப் பிறந்தான் சங்கநிதி பிரமநிதி தலைவனாய்ப் பூரண சந்திரனை வெள்ளி யாதல், வியாழமாதல் நோக்கத் துலாத்துச் சனி உதயமாகப் பிறந்தான் சீமானுமாய் உத்தமனுமா மென்பது.

ஓடிய மதிக்கிரணத் திருபால்நற்
கோளு முண்டேல்
என்றும் வாழ்ந்திடு முன்னெனில்
அன்றேல் பின்னெனில் நன்றல்ல
............ ............... ................
தீண்டிடில் உச்சக்கோள் கொண்டவை நோக்கத்
தண்டுமாய் இழையாகி யாமே. (177)

என்றது,

பூரணசந்திரனுக்கு யிரண்டு பக்கமும் நற்கோள் நிற்கப் பிறந்தான் மரிக்கு மளவும் சீமானாம். சுபசந்திரனுக்கு முன்னே நின்றால் சீமானாவன்; பின்னெனில் மலமன். சினேகிதமானவன் சந்திர லெக்கினத்தையும் சென்ம லெக்கினத்தையும் சுபகிரகங்கள் பத்திநிற்க, உச்சக் கோட்கள் வையத்தை நோக்கும் பொழுது பிறந்து, சிறார் ாவுக்கும் சரியாமென்பது.

அரசுறு புதனு திப்ப
அம்புலிக் கேழ்போல் நன்று
நிரவிய புகருடன் கூடிநிற்ப
..... உடலுயிர்க்கு......
விரவிய நற்கோள்.....
செம்பொன் வெள்ளி நின்றால்
பிரபலம் போற்றச் செல்வம்
பின்புவந் தெய்தும் பொன்னே. (178)

என்றது,

புதனுதயமாக நிறை சந்திரனுக்கு யேழாமிடத்தில் வியாழம் நிற்கப் பிறந்தான் சேனைபதியாமென்பது; வியாழமும் வெள்ளியும் கூடி நிற்கப் புதனுதயமாகப் பிறந்தான் தனவானுமாய் உபகாரியுமாமென்பது.

---

*176. காரி - சனி (கிரகம்), கோல் - துலாம் (இராசி)*

*(பாடல் ஓலையில் விடுப்பட்டுள்ளது. ஆனால் உரையில் மட்டும் உளது அவ்வுரை கீழே தரப்பட்டுள்ளது.)*

என்றது,

சென்ம லெக்கினத்துக்கும் சந்திரலெக்கினத்துக்கும் ஏழா மிடத்தே யாதல், அஞ்சாமிடத்தே யாதல் வியாழம் வெள்ளி நிற்க, புதனுக்குதயமாகப் பிறந்தான் நல்லவனு மாய், தனம் சீமானுமாய் வித்துவானுமாம் என்றவாறு.

பொன்னுட வெள்ளி புந்தி
பொலிவுடன் நோக்க வந்த
மன்னிலங் குழவி தன்மேல்
வந்ததீக் கோள்கள் நோக்கப்
பன்னுடன் கதிர்கள் வீசும்
பகலவன் தன்னைக் கண்ட
துன்னிருள் போல மாய்ந்து
சுகமிகப் பெருகு மன்றே. (179)

என்றது,

வியாழமும் வெள்ளியும் புதனு மேலான நோக்கமாகப் பிறந்த பிள்ளையைப் பாவக் கிரகங்கள் முழு நோக்கமாக நோக்கும்; தீமைகள் ஆதித்தனைக் கண்ட வந்தகாரம் போலே நீங்கு மென்பது. அமரபக்கத்துப் பாவக்கிரகங்கள் பலமுடையதென்றும் பூர்வ பக்கத்து சுபக்கிரகங்கள் பலமுடையதென்றும் அறிக வென்றவாறு

*(இதன்பின் சில பாக்கள் ஓலையில் விடுப்பட்டுள. ஓர் பாடலின உரையிலிருந்து சுவடி மேற்செய்கிறது.)*

......மூன்றொன்பதில் கார்த்திகையும் மோரெட்டில் ரோகிணியும், இந்நான்கினுத்திரமே மின்னக் கலஞ் செய்யில், அங்கண் விசும்பும் அமரரே ஆயினும் துஞ்சுவாரே. ஆண்டொன்றுக்குள் எசமானுடைய ராசிக்கு அஞ்சாமிராசி மக நட்சத்திர ராசியுமாயிருந்தாலும் அனுட நட்சத்திர ராசியாயிருந்தாலும் மூன்று ராசியும் ஒன்பதாமிராசி கார்த்திகை நட்சத்திர ராசியாயிருந்தாலும் எட்டாமிராசி ரோகிணி நட்சத்திர ராசியாயிருந்தாலும், நாலாம் ராசி உத்திர நட்சத்திர ராசியாயிருந்தாலும் இந்த ராசிகளிலே இந்த நட்சத்திரங்களிலே **மரக்கலங்கள்** முகூர்த்தம் பண்ணிச் செய்தால் தேவேந்திரனாயிருந்தாலும் தேவாதிகளாயிருந்தாலும் ஒரு வருஷத்துக்குள்ளே மரணத்தை அடைவார்களென்றறியவும்.

ஆதியும் அடுப்பு மாகா
அனுசமும் பூர மாகா
சோதியும் விசாக் மாகா
சொல்லுடிச் சதைய மாகா
ஓதிய ஓண மாகா
ஒளிதிகழ் கலங்கள் செய்யின்
பாதியும் பாடா வாரி
பழமறை முனிவர் சொன்னார். (180)

என்றது,

திருவாதிரை அனுசம், பூரம், பூராடம், பூரட்டாதி, சுவாதி, விசாகம், சதையம், திருவோணம், இந்த நட்சத்திரங்களிலே **மரக்கலம்** செய்தால் பாதி நாளைக்கு ஒடித்திரியும். பாதி நாளைக்குக் கரையிலேயிருந்து யிறந்துபோ மென்றவாறு.

அத்த மாதிமுதல் ஈராறு நாட்குடைச்
சித்த யோகம் நாட்டு மன்றே
வைத்த நற்கலம் காழிநற் சுழியில்
பத்து நாளையில் பாத்திய தாகுமே. (181)

என்றது,

அந்த நட்சத்திர முதல் சதயம் ஈறாக பனிரெண்டு நட்சத்திரமும் சித்த யோகங்களும் கூடின தினத்தில் மரக்கலங்கள் வைத்தால், பாவிரிச்ச பத்தாநாள் பரிமலொடிஞ்சு, பாயும் போய்ப், பாய் மரமும் தெறித்து ஆமாறு நான்கு புறமும்போய் ஒரு கரையிலே அடையும் என்றவாறு.

ஆதி ஓணம் அனுசம் ரேவதி
சோதி மான்டலை சொல்லிடில் அத்தமும்
ஓத மாசக் கடலோடத் தக்காமென்று
நாதனார் சொன்ன நாளிது நல்லதே! (182)

என்றது,

அசுவனி, திருவோணம், அனுசம், ரேவதி, சுவாதி, மிருகசீரிசம், அத்தம் இந்த ஏழ நட்சத்திரமும் கடலோட்டத்துக்கு நல்ல நாளென்றவாறு.

அறிவன் அத்தம் அனுசமோ ருத்திரம்
சிறிவி மூலக முப்புரஞ் சினத்த
நெறியொ டுங்கி யில்லாது நோகவே
முறிபடும் கலமும் முந்நீர் தனிலே. (183)

என்றது,

அத்தம், அனுசம், உத்திரம், மூல முப்புரம் இந்த நட்சத்திரமும் நாச யோகமும் தனயோகமுங் கூடின தினத்தில் **மரக்கலம்** பயணம் புறப்பட்டால், மலைகள், களங்கரைகள் இதுலே அடிபட்டு முறிஞ்சுபோ மென்றவாறு.

ஏராக் கொடுதி யிடுக்கநல்ல ....... நீர்வரத்தால்
சேரார் நயன மில்லாதநாட் ...... சேருமேல்
நேராய்ப் பதிபுகுதல் வெற்றிப்பரவை கடந்தப்பால்
நெறிபுகுவ தென்று நினை (184)

---

*181. பரிமல் - பருமல் - கபபற் குறுக்கு மரம்* (yard -arm)

என்றது,

மரக்கலம் வைத்து இறக்கினால் ஏராவிலேயாகிலும் வங்குக் கொடுதிகளிலே ஆகிலுந் தண்ணீர் வந்தால் தீக்கோள்களதிஷ்டப்படிப் ப்ரவை இறக்கின லெக்கினத்துக்கு யில்லாதிருந்தால் நெனச்சவிடத்துக்கு ஓடிப்போய் வெற்றியுண்டாய் வெகு திரவியங்களைத் தேடிக்கொண்டு தலத்துக்கு வந்துசேருமென்றவாறு.

சோதியெதிர் சோணைமுதல் மீன பூசம்
பாரில்முதல் வான்கலம் விடும்நா ளாமது
கயல்சாடி சுறாவோடல் வானோடில்
வந்தயிள மானென் றிருந்துவரு மென்றேன். (185)

என்றது,

சோதி உத்திராடம் திருவோணம் அவிட்டம் புனர்பூசம் யிதுகளிலே **மரக்கலம்** பயணம் புறப்பட்டாலும், கன்னி மீனம் கும்பம் மகர கர்க்கடகம் இந்த லெக்கினத்திலே யிந்த நட்சத்திரங்களிலே பயணம் புறப்பட்டால் வெகு திரவியங்களைத் தேடிக்கொண்ட வருமென்றவாறு.

ஆதி யாரல் அருப்புச் சதயமும்
ஓது கேட்டையோ டோன மிகவிவவை
தீதில் சோதிசேர் முறஞ்செய்கை யாழம்பா!
ஏகுறு நற்கலம் வைத்திடில் மாட்சியே. (186)

என்றது,

திருவாதிரை கார்த்திகை பரணி சதயம் கேட்டை திருவோணம் மகம் சுவாதி விசாகம் அத்தம் இதுகளிலே தோணிகள் முகூர்த்தம் பண்ணி வேலை செய்வதற்கு நல்ல தென்றவாறு.

கொள்ளுமூன் றுத்தி ரங்கள்
 அத்தமோ டாதி பூசம்
புள்ளிமான் பூணறி யோணம்
 புனர்தமா மனுசம் சோதி
கொள்ளுமாம் புள்ளி யோகம்
 கோலமாக் கடவது வோடக்
................ ................ ............ (187)

---

*184. வெண்பாவின் மூன்றாமடியில் தளைத்தட்டுகிறது*
*185. சோனை - திருவோண நட்சத்திரம்*
*186. ஆதி - திருவாதிரை நட்சத்திரம், அருப்பு - பரணி நட்சத்திரம், ஆரல் - கார்த்திகை நட்சத்திரம், சோதி - சுவாதி நட்சத்திரம், கை - அத்த நட்சத்திரம், முறம் - விசாக நட்சத்திரம்*
*187. ஆதி - அசுவனி நட்சத்திரம்*

என்றது,

உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், அசுபதி, பூசம், மிருக சீரிடம், ரோகிணி, திருவோணம், புனர்பூசம், அனுசம், சோதி இந்த நட்சத்திரங்களும் சித்தயோகமும் திங்கள் புதன் வியாழன் வெள்ளி சனி இந்த வாரங்களும் வளர்பிறை பதினாலு நாளைக்குள்ளே பயணம் போகக் கடலோட நன்று.

## ஏராப் பலகையில் கணுக்கள் கிடந்தால் முறிக்கும் வகை

ஏராக் கணுமுறிந்த ஒன்றிரண்டு மூன்றினோ
டைந்தும்பொல் லார்ஒன்பதோர் நல்ல தாகும்
ஒருநான்கி னோடிரு நான்கும் தட்டுண்ணும்
மன்றிலங்கு திரவியத்தை முதலாக வைத்துக்
கொண்டையந்தார் முடியண்ணல் நலத்தைக் கொடுக்கும்
கெம்பீரா உனக்கும் வகையாகக் கொள்ளும்
பண்டியோ டத்தமும் மிகநோக்கை யறுக்கும்
பத்தாகக் கூறிட்டுப் பலன்கள் பாரே! (188)

என்றது,

ஏரா நீளம் யித்தனை முழமென்று நிதானித்தைப் பார்த்துப் பங்கிட்டுப் பத்துப் பங்குயிட்டு, முதல் பங்கு ஏழாம் பங்கில் கணுக் கண்ணடை கிடந்தால் தட்டுண்டுபோம். பத்தாம்பங்கில் கணுக்கிடந்தால் எசமான் மரணம்; அணியத்துக் கணுக்கிடந்தால் மெத்த நல்லது. பனிரெண்டு ராசிகளில் மேடம் ரிடபம் மிதுனம் இப்படிப் பிரிச்சுப் பார்க்கப்பட்ட ராசிகளிலே கணுக்கிடந்தால் வரவுக்கும் சிலவுக்கும் சரிக்கட்டி யிருக்கு மென்றவாறு.

ஏராவின் நீள மெனதாரு மென்றெண்ணி
இருமோர் முழங்கள் விரலால்
சேராமல் எட்டி னாலே பெருக்கித்
தொகையான வன்மை யெல்லாம்
சிறக்க இருபத் தேழ்தனில் கழத்துச்
சேடந் தன்னை
ஆராயும் வங்கு முதலாக வெண்ணிலினிதே
செல்லும் வங்கம் தானே. (189)

என்றது,

ஏராவும், நீளம் யித்தனை முழமென்று விரல் கணக்கிலே பெருக்கி, எட்டினாலே பெருக்கித் தொகையானதை இருபத் தேழிலே கழிச்சு மிஞ்சின சேடம் இத்தனையென்று வங்கு முதலாக எண்ணி ஒன்னு ரெண்டு மூணு அஞ்சு மிஞ்சினால் ஆகாது; ஏழு ஒன்பது நல்லது. நாலு யெட்டு ஆகாது, பத்து நல்லது யென்றவாறு.

---

*188. பண்டி - ரோகிணி நட்சத்திரம்.*

உரைவங்க நாளும் உடையான்றன் நாளும்
உரமொன்ற வொன்றலும் நிரைநீர்
உரவிங் கண்ணேறி வருகின்ற நாளும்
புகழொன்ற வொன்ற உரைநீ
முடிகின்ற சேடம் முடியொன்ற யெங்கு
மோகமொன்ற ஒன்ற வோரைநீ
திரிகின்ற வல்லத் திசையெங்கும் வருமோடி
நதிவென்று வென்று வருமே. (190)

என்றது,

உடையவன் நட்சத்திரமும் ஏரா ஓடின நட்சத்திரமும் அந்த நட்சத்திரத்துக்கும் இந்த நட்சத்திரத்துக்கும் யெண்ணி தொகையைச் சேர்த்து மறுபடியும் ஏரா ஓடின நட்சத்திரம் தொடுத்து எசமான் நட்சத்திரம் மட்டும் யெண்ணி, இரண்டு தொகையும் ஒன்றாகக் கூட்டி, ஒன்பதில் கழிச்சு மிச்சங் கண்டது இத்தனை யென்று சூரிய முதலாக யெண்ணிக் கண்டால் ஒன்று மிஞ்சினால் சூரியன், ரெண்டு மிஞ்சினால் சந்திரன், மூன்று மிஞ்சினால் செவ்வாய், நாலு மிஞ்சினால் புதன், அஞ்சு மிஞ்சினால் வியாழன், ஆறு மிஞ்சினால் சுக்கிரன், ஏழு மிஞ்சினால் சனி, யெட்டு மிஞ்சினால் ராகு, ஒன்பது மிஞ்சினால் கேது; இவைகளில், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரமானால் சமுத்திரங்க ளெல்லாம் ஓடி வென்று யெட்டுத் திசைக்கும் ஓடி வென்று, வெகு திரவியங்களைத் தேடிக் கொண்டு தலத்துக்கு ஓடிவந்து சேரும் என்றவாறு.

எண்ணியநாள் இருபத் தெட்டில் இருந்ததற்பின்
நண்ணிய கூம்பு நடுச்சூலந் தன்னில்
மண்ணில் மரக்கலங்கள் நடுக்கமறக் கடலோடி
அண்ணிய நாள்மூன்றில் அக்கடல் தாழுமன்றே. (191)

என்றது,

சொல்லப்பட்ட இருபத்தேழு நட்சத்திரமும் ஆடிசுத்து ஒரு நாளும் ஆக யிருபத்தெட்டில், நடுச்சூலத் தலையால் எண்ணிவரில், சூலத்தலை மூன்றிலும் நடுச்சூலத்தலையாய் வருகிற நாளில் ஏரா ஓடினாலும் பயணம் புறப்பட்டாலும் மூணுநாளையிலே கடலிலே தாழுமென்றவாறு.

செப்பினோ மாறிரண்டு நாளில் இசைந்ததற்பின்
தப்பிலா வங்கம் தன்னுளநாளொடு கிரணமும்
எப்போதும் சிந்தாத்திரை யென்று சொல்வர்
இப்பேருகில் வந்தவர்தான் செகம திக்க. (192)

---

*190. இப்பாடலின் சந்தம், பாடல், 130 உடன் ஒப்பிடதக்கது*
*191. இப்பாடல், பாடல் 131 உடன் கருதத்தக்கது*
*192. சிந்தாத்திரை - சிந்தா யாத்திரை - நல்ல பயணம்*

என்றது,

சூலத்தலைநாள் என்பதும் தள்ளி உளநாள் பனிரெண்டு நாளைக்குளே என்று ஓடினாலும் பயணம் புறப்பட்டாலும் சிந்தாத்திரையாய் ஓடிப்போய், சிந்தாத்திரையாய் வந்துசேரு மென்றவாறு.

ஆதித்தன் சென்ற டைந்த
அந்தமில் ராசி தன்னில்
சாதித்த நற்க லங்கள்
சாவாகும் போதிக் கவாடமொரு
கூப்புப் பல்சரக்கும் ஏற்றுவரால்
தேக்கமற்று
............ ............ ........ (193)

என்றது,

சூரியன் ஒரு ராசியிலே முப்பது நாளைக்கு இருக்கிறவன் இருபத்தேழு நாட் சென்றுபோற மிச்சம் மூன்று நாளிலே சூரியனிருக்கிற ராசியிலே ஏரா ஓடில் அந்த உரு உடைஞ்சுபோம். நல்ல நாளிலே நல்ல முகூர்த்தத்திலே ஏரா ஓடினால் வெகுநாளைக்கு ஓடித்திரிமென்றவாறு. .

அருக்கனை யாதல் மிக்க
அழகிய மதியே யாதல்
நெருக்கிய அரவு தீண்டில்
நின்றன முதலோர் நாளும்
தருக்கிய பின்னில் மூன்றுந்
தடங்கடல் ஓடில் வங்கம்
திருக்கிடும் வாரி தாழ
தீய இடருண் டாமே. (194)

என்றது,

சூரியன் ஆகிலும் சந்திரன் ஆகிலும் கிராணந்தீண்டின நாளும், அதுக்குப் பின் தோன்றின நாளும் பயணம் புறப்படுவதற்கு ஆகாது. அதில் பயணம் புறப்பட்டால் பருமல் பாய்மரந் தெறித்து, நீர்பெருகி இடருண்டாகு மென்றவாறு.

ஏரா ஒழுக்கம் ஏழில் வாரிதாழ
விருப்பந் தாரணைக்க வெப்பச்சூன்
சோரா வங்கத்துப் பூதல மண்ட
ஏத்த கூம்பு யாத்த........
பேராத கெடுதிப் பணியெண்ணிப் பூதலம்
பரிவாய் இயற்றிய தன்பின்
சேராத நாளு மறவாது கழித்து
சேரலா நாட்கள் தெரிந்திடாயே. (195)

என்றது,

*(உரை ஓலையில் விடுபட்டுள்ளது)*

---

*193. கவாடம் - பலசரக்குப் பொதி. கூப்புதல் - குவித்தல்*

உத்தமநாள் தெரிந்து ரைக்கில் முன்னோர் சொன்ன
ரோகிணியும் பூசமுடன் ஓணஞ் செக்கும்
மத்திமநாள் அவிட்டம் புனர்தம் தானும் வாய்த்த
உத்திரட்டாதி உத்ரா உத்திரமே
சாத்தியஇந் நாளினொடு
........ ........... ...........
ஏத்திய உடுக்களுயிர் கொள்ள வெற்றியுண்டாய்
வாய்த்த குணமிது வகுத்திடாயே. (196)

என்றது,

ரோகிணியும் பூசந் திருவோணம் சதையம் அவிட்டம் புனர்பூசம் உத்திரட்டாதி உத்திராடம் உத்திரம் இதுகளிலே அமிர்தயோகமும் பக்க திருஷ்டியும் சந்திர திருஷ்டியும் உண்டாக ஏரா ஓடுவது என்றவாறு.

தக்காநடு ஏராவின் பக்கம் நடுவுபின்
அக்குழியில் பல்பொருளுஞ் சேதமா
மிக்க மரச்சுழிகள் தானில னோக்கிடில்
மிக்கதொரு செல்வ மிகவளிக்குங் காணே! (197)

என்றது,

ஏராப் பலகையின் நீளத்தில் வீசம்போலே வட்டமாய்க் கணுக்கிடந்தாலும் நடுவிலே மாகப்பலகை, பத்தாறுப் பலகை, சீனிப்பலகை, பாய்மரம் நடுவுட்குழியில் தோணி உள்ளடிகளிலே இருந்தால் பொருளுஞ் சேதமாம். அந்தச் சுழி உள்ளடிகளிலே யில்லாமல் புறம்பே நிலத்தைப் பார்க்கயிருந்தால் வெகு செல்வங்களைக் கொடுக்கு மென்றவாறு.

ஆதிஅரு ளத்திரிய மரத்தை நோக்க
ஆசாரி சாவாம்
நீதிப் பிசிர்கள் நீளத்தோடு நிகழுங்கால்
மோதுவிக்கும்
பாதிநடு வுள்மரத்தில் பாரிலுற ஓடுமே.
........................... ........................... (198)

என்றது,

அப்படி வீசம்போலக் கணுக்கள் தலமரக் கட்டைக்குள்ளே ஏராவில் கிடந்தாலும், பதங்களிலே கிடந்து கல மரக்கட்டையை நோக்கிப் பார்க்கிறதுபோலே கிடந்தாலும் ஆசாரி விழுந்துபோவான்.

*(இவ்விடத்தில் சுவடி முடிகிறது; ஆனால் மேலும் பாக்கள் மூலத்தில் இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது).*

---

*196. சீர்கள் விடுப்பட்டுள.*

Printed by
**Royapettah Stationery and Printing and Allied Products**
**Producers Indl. - Co.op Society Ltd.**
26, Koya Arunagiri First Street Royapettah
Madras - 600 014. ☎ : 84 56 70